# ஆளில்லாக் கலம் சந்திர மண்ணுடன் பூமிக்கு திரும்பி வருகிறது

Registered as a News Paper in Ceylon
விலை சதம் 15 ★ ★

ஈழநாடு

THE EELANADU
National Tamil daily
தபால் பெட்டி எண்: 49
போன் : 389
மலர் 12
இதழ் 224
தேசிய தினசரி
யாழ்ப்பாணம் புரட்டாதி 7 ஜபு 21 புதன்கிழமை (23-9-70)

சரஸ்வதி பூஜையை
முன்னிட்டு
தூய்மையான - கலப்பற்ற
சர்க்கரை
சுத்தமான - கல்லில்லாத
அவல்
மொத்தமாகவும் - சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.
ஆ. வைத்திலிங்கம் & கோ.
45, கே.கே.எஸ். ரோட், - யாழ்ப்பாணம்.
போன்: 663

## அமெரிக்கரை மிஞ்சும் சோவியத்சாதனை

மாஸ்கோ, செப். 22

**சோவியத் விஞ்ஞானிகள் சந்திரனுக்கு அனுப்பிய லூனா 16 என்ற ஆளில்லாசெயற்கை கலம் சந்திரனின் மேல்பரப்பில் மண்மாதிரிகளை சேகரித்துக்கொண்டு இப்பொழுது பூமியை நோக்கி திரும்பி வந்து கொண்டிருக்கிறது.**

சந்திரத்தரையில் மண் மாதிரிகளை எடுத்துவர அமெரிக்க விஞ்ஞானிகள் மனிதர்களுடன் கூடிய அப்பல்லோ கலங்களை பெரும் சிரமத்துக்கிடையில் செய்து முடித்த காரியத்தை ஆளில்லாத கலங்கள் மூலமே செய்துவிட முடியும் என்பதை இந்தச் சாதனை நிரூபிப்பதாக அவதானிகள் கருதுகிறார்கள்.

லூனா 16 கடந்த ஞாயிற்றுக்கிழமை சந்திரத்தரையில் வரட்சிப் பிராந்தியத்தில் மெதுவாகத் தரையில் இறங்கியது. அதன்பின் பல விஞ்ஞான முக்கியத்துவம் வாய்ந்த தகவல்களை பூமிக்கு அனுப்பியதுடன் டெலிவிஷன் படங்கள் பலவற்றையும் அது பூமிக்கு அனுப்பியது.

லூனா 16 கலத்தில் பொருத்தப்பட்டிருந்த ஒரு கருவி சந்திரத் தரையில் மண் மாதிரிகளை சேர்த்துக் கொண்டதின்பின் அதிலிருந்த ஒரு ரொக்கட் தீர்க்கப்பட்டு கலம் மேலே கிளம்பியது. கலம் இறங்குவதற்கு பயன்பட்ட அடித்தளம் சந்திரத் தரையிலேயே விடப்பட்டுள்ளது. அதிலுள்ள கருவிகள் தொடர்ந்து தகவல்களை பூமிக்கு அனுப்பிக் கொண்டிருக்கும். சந்திரத் தரையிலிருந்து மேலே கிளம்பிய கலம் இப்பொழுது பூமியை நோக்கிய பாதையில் திரும்பிவந்துகொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பூமியில் காற்றழுத்த மண்டலத்துக்குள் கலம் பிரவேசித்த பின்னர் அது பரசூட்கள் மூலம் பூமியில் மெதுவாகத் தரையிலிறங்கும் என்று தெரிகின்றது. கலத்தில் எதுவித கோளாறும் நடைபெறாவிட்டால் வியாழக் கிழமையன்று அது பூமியில் இறங்கும் என்று சோவியத் விஞ்ஞானிகள் எதிர்பார்க்கின்றார்கள்.

## தமிழரசு அரசியல் திட்டம்

## கட்சி பொதுச்சபையின் அங்கீகாரம் முதலில் பெறப்படும்

யாழ்ப்பாணம், புதன்

அரசியல் நிர்ணயசபைக்கு சமர்ப்பிக்கப்படவிருக்கும், தமிழரசு கட்சியின் மகஜரையும் திட்டத்தையும் இம்மாதம் 28-ம், 29-ம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் தமிழரசு பொதுச் சபையின் அங்கீகாரத்திற்கு விடுவதென நேற்று நடந்த மத்திய செயற்குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

திரு எஸ் எம் இராசமாணிக்கம் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் கீழ்க்காணும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

பலாலி கனிஷ்ட பல்கலைக் கழக கல்லூரியை மூடுவதற்கோ, வேறுஇடத்திற்கு மாற்றுவதற்கோ, கல்வி அமைச்சுசெய்யும் முயற்சிகளை கைவிடுமாறும் இக் கல்லூரியை தொடர்ந்து பல்தொழில் நுட்பக் கல்லூரியாக நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும், எக்காரணம்கொண்டும் இப்பொழுது கற்பிக்கப்படும், பயிற்சி நெறிகளை மாற்றவோ, குறைக்கவோ வேண்டாமெனவும் கல்வி அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு குழுவொன்றை இச்செயற்குழு நியமிக்கின்றது.

சென்ற சில ஆண்டுகளாக போதியளவுதமிழ் ஆசிரியர்கள் பயிற்றப்படாமையாலும், இப்பொழுது பயிற்றப்பட்ட பல தமிழ் ஆசிரியர்கள் இளைப்பாறுவதாலும், இப்பொழுதுள்ள தமிழ்ஆசிரிய கலாசாலைகள் தேவையான ஆசிரியர்களைப் பயிற்றப் போதியனவல்ல. ஆகையாலும் திருநெல்வேலிசைவ ஆசிரிய கலாசாலையிலும் தமிழ் ஆசிரியர்களை பயிற்றுவதற்கும் தமிழ் மகாவித்தியாலயங்களுக்கும், கனிஷ்டபாடசாலைகளுக்கும் விசேடபயிற்சிபெற்ற ஆசிரியர்கள்தேவையான அளவுக்கு நியமிக்கப்பட வேண்டியிருப்பதாலும், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிலும் பயிற்றப்படும் ஆசிரியர்களின் தொகையை மூன்று மடங்காக கூட்டுவதற்கு உடனே நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும்இச்செயற்குழு முடிவுசெய்கிறது

கீனா கொலை தோட்டத் தொழிலாளர் மீது பொலி

( 4-ம் பக்கம் பார்க்க

# திருமலை இராணுவக் கொடி இனஒற்றுமையை குலைக்கும்

## உடனடி நடவடிக்கை அவசியம் என்கிறார் நேமிநாதன்

யாழ்ப்பாணம், புதன்

**திருக்கோணமலை கோட்டை வாசலில் இராணுவக்கொடிபறக்க விடப்பட்டிருப்பது அங்குவாழும் சிறுபான்மையினத்தவர்களை புண்படுத்தக் கூடிய செயலாகும். இக்கொடியை கோட்டைவாசலில் பறக்கவிடக்கூடிய அவசியம் எதுவும் இல்லை. இவ் அதிபர் நடவடிக்கை எடுக்கவிருப்பதாக அறிகிறேன். இப்படியான செயல்கள், இன ஒற்றுமையை வளர்க்காது.**

திருக்கோணமலை எம். பி. திரு ப. நேமிநாதன் நேற்று நமது நிருபருக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர்மேலும் கூறியதாவது: கோட்டைக்குள்தான் அரசாங்க செயலகம் இருக்கிறது. அங்கேஒரு சிறுபகுதியில்தான் இராணுவம் இருக்கிறது. செயலகத்தில் தேசியக் கொடிபறக்கவிடப்பட்டிருக்கிறது ஏதாவது வைபவங்களின் போதுதான் தேசியக்கொடி பறக்கவிடுவது வழக்கம் ஆனால் இங்கு நிரந்தரமாக தேசியக்கொடி பறக்கவிடப் பட்டிருக்கிறது

### இராணுவக் கொடி

கோட்டை வாசலில் இராணுவக்கொடி மட்டும் பறக்கவிடப்படவில்லை இராணுவத்தின் சொத்து என்று எழுதப்பட்ட [illegible]கை ஒன்றும் தொங்கவிடப்பட்டிருக்கிறது. இது தவறான அர்த்தத்தை கொடுக்கிறது அரசாங்கம் உடனடியாக இவ்விஷயத்தில் தலையிட்டு,

(4-ம் பக்கம் பார்க்க

## பிரதமர் நாடு திரும்பினார்

கொழும்பு, செவ்வா

பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா இன்று மாலை நாடு திரும்பினார். லுசாக்காவில் நடந்த மகாநாட்டில் இலங்கைத் தூதுக்குழுவுக்குத் தலைமை தாங்கிய பின்னர் பிரெஞ்சு குடியரசில் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுவிட்டு இன்று மாலை கட்டுநாயக்காவிமான நிலையம் வந்து சேர்ந்தார்,

பிரதமரை பதில் அரசாங்கத் தலைவர் திரு மைத்திரி பாலசேனநாயக்கா, போக்குவரத்து அமைச்சர் திரு லெஸ்லி குணவர்த்தனா, பதில் பொதுநிர்வாக அமைச்சர் திரு நீல்டி அல்விஸ் ஆகியோர் விமானத்தில்



மர் இறங்கியதும் கவர்னர் ஜெனரல் கோபல்லாவாவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையம் வந்து சேர்ந்தார்.

பிரதமரை பதில் அரசாங்கத் தலைவர் திரு மைத்திரிபாலசேனநாயக்கா, போக்குவரத்து அமைச்சர் திரு லெஸ்லி குணவர்த்தன, பதில் பொதுநிர்வாக அமைச்சர் திரு நீல்டி அல்விஸ் ஆகியோர் விமானத்தில் வைத்து வரவேற்றனர். விமானத்திலிருந்து பிரத



மர் இறங்கியதும் கவர்னர் ஜெனரல் கோபல்லாவாவும் அவரது துணைவியாரும் வரவேற்றனர்.

கூடிய செயலாகும். இக்கொடியை கோட்டைவாசலில் பறக்கவிடக்கூடிய அவசியம் எதுவும் இல்லை. இவ்விஷயமாக அரசாங்க

வ[...] கூறினர்.

அவர்மேலும் கூறியதாவது: கோட்டைக்குள்தான் அரசாங்க செயலகம் இருக்கிறது. அங்கேஒரு சிறுபகுதியில்தான் இராணுவம் இருக்கிறது. செயலகத்தில் தேசி[...]

என்று எழுதப்பட்ட[...]கை ஒன்றும் தொங்கவிடப்பட்டிருக்கிறது. இது தவறான அர்த்தத்தை கொடுக்கிறது. அரசாங்கம் உடனடியாக இவ்விஷயத்தில் தலையிட்டு,

(4-ம் பக்கம் பார்க்க)

யில் திரும்பிவந்துகொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பூமியில் காற்றழுத்த மண்டலத்துக்குள் கலம் பிரவேசித்த பின்னர் அது பரசூட்கள் மூலம் பூமியில்

ரியாக நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும், எக்காரணம்கொண்டும் இப்பொழுது கற்பிக்கப்படும், பயிற்சி நெறிகளை மாற்றவோ, குறைக்கவோ வேண்டாமெனவும் கல்வி

நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் இச்செயற்குழு முடிவுசெய்கிறது.

கீனு கொலை தோட்டத் தொழிலாளர் மீது பொலி

(4-ம் பக்கம் பார்க்க

## ஆசிரியர்களுக்கு மீண்டும் எச்சரிக்கை!

# தமது பாடசாலையில் மட்டுமே கல்வி கற்பிக்க வேண்டும்

பருத்தித்துறை, செவ்.

'தங்களுக்குரிய பாடசாலைக் கடமைகளுடன், பல்கலைக் கழகங்களிலேனும், ஏனைய ஸ்தாபனங்களிலேனும், பகுதி நேரக்கற்பித்தல் வேலையை ஆசிரியர் மேற்கொள்ளக் கூடாது, என மாவித்தியாதிபதியும், கல்வியமைச்சின் நிரந்தரச் செயலாளருமான திரு பீ. உடகம, ஒரு சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளார். அந்தச் சுற்றறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

'பாடசாலை வேலை திருப்திகரமாகச் செய்யப்பட வேண்டுமாயின் பெருமளவு ஆயத்தஞ் செய்யப்படல் வேண்டும். முழுநேர ஆசிரியர் ஒருவர் தனது வேலை பாதிக்கப்படாது கடமையாற்ற வேண்டுமாயின் அத்தகைய பூரண ஆயத்தத்துக்குப் போதிய நேரம் இருக்காது. எனவே உங்கள் நேரங்களை வெளியில் செலவிடுவதை நிறுத்திக்கொள்ள வேண்டும்.

'சிரேட்ட, கனிட்ட தொழில் நுட்ப தாபனங்களில் வர்த்தக தொழில் நுட்ப பாடங்களை பகுதி நேரம் கற்பிப்பதற்கு விசேட பயிற்சிபெற்ற ஆசிரியர்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவதால், அத்தகைய ஆசிரியர்களுக்கு விலக்கு அளிப்பதுபற்றி ஆலோசிக்கப்படும். அவ்வித ஆசிரியர் நியமனத்திற்கும் கல்வியமைச்சின் அனுமதி வேண்டும்'.

'அமைச்சின் அங்கீகாரம் பெறாது வேறு தாபனங்களிற் பகுதிநேரக் கற்பித்தலில் ஈடுபடுவோர், தாபனத்தின் பெயர், பாடங்கள், காலம், பெறும் வேதனம் ஆகிய விபரங்களுடன் அமைச்சுக்கு விண்ணப்பிப்பதுடன், அகடோபர் 1ம் திகதியுடன் அக் கடமையைக் கைவிட வேண்டும்'.

## கிராமஅபிவிருத்தி நிதி ஒதுக்கீடு

முசலி, செவ்வாய்

கிராம அபிவிருத்தி குடிசைக்கைத்தொழில் இலாகாவால், மன்னார் மாவட்ட கிராம அபிவிருத்தி தெருக்கள் திருத்துவதற்கு ரூபா 8000மும், பொதுப் பயன்பாட்டுவேலைக்கு ரூபா 23000மும் வருகிற 1970-71ம் நிதிஆண்டுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

இதற்கான செயல்படுத் திட்டங்களை மன்னார், மாந்தை, முசலி ஆகியபிரிவுகளைச் சேர்ந்த காரியாதிகாரிகளிடம் மன்னார் மாவட்டகுடிசைக் கைத்தொழில் கிராம அபிவிருத்தி உதவி அதிபர் திரு எம், திருச்செல்வம் கேட்டுள்ளார்.

## ஆங்கில மொழியை முற்றாக ஒழித்து

# 'தமிழுக்கும், சிங்களத்துக்கும் சமசந்தர்ப்பம் தருவோம்'

மாவிட்டபுரம், செவ்.

"தென்னிலங்கையில் பெருந்தொகையான சிங்களப்பிள்ளைகள் தமிழ் மொழியைப்படிக்கிறார்கள் அதேபோல் இப்பகுதியிலுள்ள தமிழ் பிள்ளைகளும் சிங்கள மொழியைக் கற்கவேண்டும் சிங்களத்துக்கு தமிழ் எதிரியில்லை தமிழை அழிக்கும் நோக்கமுமில்லை நாட்டில் தேசிய ஐக்கியமும் புதிய இனஎழுச்சி ஏற்படச்செய்யவும் இரு இனங்களுக்கிடையே அன்று தொட்டு இருந்து வந்த கலாச்சாரத்தைப் பாதுகாக்கவும் சிங்கள மொழியை தமிழ் மக்கள் விருப்பு, வெறுப்பின்றிக் கற்கவேண்டும்"

இவ்வாறு உதவி தொழில் அமைச்சர் திரு எச் எஸ் சிறிசேன அம்பனையில் நடந்த வரவேற்பு கூட்டமொன்றில் பேசுகையில் கூறினர்.

தெல்லிப்பழை கிராம சபைத் தலைவர் திரு எம் சிதம்பரநாதன் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் அமைச்சர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது.

இந்நாட்டில் இரு இனமும் பல நூற்றாண்டு காலமாகஒன்றிணைந்துவாழ்ந்துவந்தன. ஆங்கிலேயர் காலத்தில் ஆங்கிலம் புகுத்தப்பட்டதால் எங்களது மொழிகளில் வேற்றுமை ஏற்பட்டு எமது இனங்களை சிதைய வழிஏற்பட்டது. இப்படிசிதைவடைந்துள்ள இனங்களை ஒன்றுசேர்த்து ஐக்கியத்தை வலுப்படுத்த ஆங்கில மொழியின் அந்தஸ்தை முற்றாக ஒழித்து, தமிழுக்கும், சிங்களத்துக்கும்சமசந்தர்ப்பம் அளிக்க இருக்கிறோம். சோஷலிஸ நாடுகளில் 3 மொழியை படித்தாலும் உள்நிர்வாகத்திலும் கல்வியிலும் சுயமொழிதான் கையாளப் படுகிறது அதேபோல் இங்கும் தமிழும், சிங்களமும் உள்நிர்வாகத்திலும் கல்வியிலும் முக்கியஇடம் பெறவேண்டும்.

சேர் பொன் இராமநாதன் அருணாசலம் போன்ற உத்தமர்கள் தேசிய வீரர் வரிசையில் வைக்கப்படுவதற்கு காரணம், அவர்கள் ஒரு இனத்துக்காக சேவையாற்றாது முழு நாட்டுக்காகவும் சேவையாற்றினார்கள். ஆனால் தற்போதைய தமிழ் அரசியல் கட்சிகள் காட்டும் வழிகள் பிழையானவை. இவர்கள் அனைவரும் முன் வாழ்ந்த உத்தமர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி புதிய பாதையைக் காண வேண்டும்.

தமிழ் மக்கள் தனித்து நின்றோ அல்லது வேறு எந்த ஒப்பந்த முறையினாலோ சிங்கள மக்களுடைய ஒற்றுமையைப்பெறமுடியாது. யு என் பி-தமிழரசு ஆகிய கட்சிகள்

(4-ம் பக்கம் பார்க்க)

## இ. போ. ச. ஊழியர் சபைத் தேர்தல்

# இரு இடங்களில் தமிழரசு ஆதரவு கழகம் வெற்றி

நல்லூர், புதன்

யாழ்ப்பாணம் கோண்டாவில் இ. போ. ச. ஊழியர் சபைத் தேர்தலில் தமிழரசுக் கட்சியின் டப்பாட்டிலுள்ள இலங்கைத் தொழிலாளர் கழகம் பெரும்பான்மையான இடங்களைக்கைப் பற்றியுள்ளது, இதற்கு அடுத்தபடியாக லங்கா சமசமாஜக் கட்சியின் கட்டுப்பாட்டிலுள்ள ஐக்கியமோட்டார் தொழிலாளர் சங்கம் அதிக ஸ்தானங்களை எடுத்துள்ளது. இலங்கைத்தொழிலாளர் கழகத்துக்கு 8 ஸ்தானங்களும் ஐக்கிய மோட்டார் தொழிலாளர் சங்கத்துக்கு 4 ஸ்தானங்களும் கிடைத்தன, சுயேச்சையாளர் 3 ஸ்தானங்களைப் பெற்றனர்.

மன்னார் டிப்போவில் 5 ஸ்தானங்கள் இலங்கைத் தொழிலாளர் கழகத்துக்கும் இரண்டு ஐக்கிய மோட்டார் தொழிலாளர் சங்கத்துக்கும் கிடைத்தன, ஒரு சுயேச்சையாளர் வெற்றி பெற்றார்.

கோண்டாவிலிலுள்ள யாழ் பஸ் டிப்போவில் நேற்றுநடந்த ஊழியர்சபை தேர்தலில் சாரதிகள் பகுதியில் 4 பேர் தெரிவு செய்யப்பட்டனர். திருவாளர்கள் ஆறுமுகம் சங்கரலிங்கம், சுப்பையா திருநாவுக்கரசு, வல்லிபுரம் குணசிங்கம், கந்தையா ஆறுமுகம் ஆகிய சாரதிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

கண்டக்டர்கள் பகுதியில் திருவாளர்கள் இ. பீதாம்பரம், வி. வேதநாயகம், ஏ. இராமநாதன், ஏ. யோகராஜா, என். நாகராஜா ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

திருவாளர்கள் த இராசையா, பி பத்மநாதன், எஸ் குமாரகுலசிங்கம் ஆகியோர் பொறியியல் பகுதியிலிருந்தும், திருவாளர்கள் என் தேவராஜா, எஸ் பரமலிங்கம், ஏ ஜெயசிங்கம் ஆகியோர் அலுவலகப் பணியாளர் பகுதியிலிருந்தும் தெரிவுசெய்யப்பட்டனர்.

# சுருட்டுத்தொழிலாளரின் நலனைக் கவனிக்க அதிகாரி ஒருவர் வேண்டும்

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணத்தில் மட்டும் 5000க்கு மேற்பட்ட சுருட்டுத்தொழிலாளர்கள் சுருட்டுத் தொழிலையே நம்பி வாழ்கின்றனர், இத்தொழிலாளர்கட்கு ஒப்புக்கொள்ளப்பட்ட வேதனம் ஒழுங்காக வழங்கப்படுவதில்லை. இதே தொழிலை நடாத்தும் முதலாளிகள் தொழிலாளர்கட்கான சேமலாபநிதியும் வழங்குவதில்லை. சுகாதார வசதிகளற்ற தொழிலை நடாத்தும் இத்தொழிலாளர்களது கஷ்டங்களை நிவர்த்திசெய்ய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

அகில இலங்கை ஐக்கிய சுருட்டுத் தொழிலாளர் சங்கச்சார்பில் நேற்று முன்தினம் நடைபெற்றவரவேற்புக் கூட்டத்தில் கலந்து கொண்ட உதவி தொழில் அமைச்சர் திரு. சிறிசேனவிடம் வாசித்தளிக்கப்பட்ட மகஜரில் இவ்வாறு கோரப்பட்டுள்ளது.

சங்கத்தலைவர் திரு. ஆ. துரைராசசிங்கம் தலைமையில் சங்க அலுவலகத்தில் நடைபெற்ற இவ்விழாவில் உதவித்தொழில் ஆணையாளர் கம்யூனிஸ்ட் பிரமுகர் திரு வி. பொன்னம்பலம் திரு விசுவநாதன் எம். எம். ஸி, ஆகியோரும் கலந்து கொண்டனர்.

மகஜரில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது

1000 சுருட்டுக்கு 15ரூபா சம்பளம் வழங்கப்படவேண்டும். ஆனால் இதை சிலமுதலாளிமார் வழங்குவதில் தாமதப்படுத்துகிறார்கள்.

மாதத்தில் இருமுறை சம்பளம் வழங்கப்படவேண்டுமென நியதி உள்ளபோதிலும்வேதனம் மூன்றுமாதங்கட்கு ஒருமுறைதான் வழங்கப்படுகின்றது. சட்டபூர்வமாக தொழிலாளர்தம் சேமலாபநிதியில் சேர்க்கப்படவேண்டும்.

சட்டமூலம் சேமலாபநிதி சம்பளம் ஆகியன அமுல் நடத்தப்படவேண்டும்.

சம்பள நிர்ணய சபை உடனடியாகக்கூடி முதலாளிகள், தொழிலாளிகட்கு இடையே ஏற்பட்ட உடன்படிக்கைகளை அமுல் நடத்த வேண்டும். தொழில்இலாகா மூலம் 1000 சுருட்டுக்கு ரூபா 15 கூலி என்ற நியதி நடைமுறைக்கு வரவேண்டும்.

சுருட்டுத்தொழிலாளர்கள் வறியவர்கள் மட்டுமின்றி கல்வி அறிவற்றவர்களாதலால் சுலபமாக ஏமாற்றப்படுகின்றனர். மாதத்தில் 10-15 நாட்கள் வேலை செய்வதன் மூலம் கிடைக்கக்கூடிய ஆகக்கூடிய வருமானம் ரூபா 100 மட்டுமே.

சுருட்டுத்தொழிலை கூட்டுத்தாபனம் ஆக்கும்படி நாம் விடுத்துள்ள கோரிக்கைக்கு தாங்களும் எமது தொழிலாளர் சார்பில்குரல் கொடுத்து முழுமையாக சுருட்டுத் தொழிலைக் கூட்டுத்தாபனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

(சு.வி.ம)

அமைச்சர் மகஜரைப் பெற்றுக்கொண்டு பேசுகையில் தாமும் ஒரு தொழிலாளியாக இருந்ததினால் தொழிலாளர்களுடைய கஷ்டங்கள் பற்றி தமக்கும் தெரியும் என்றும், தன்னாலான உதவி தொழிலாளர்களுக்குக் கிடைக்கும் என்றும் தொழிலாளர் களுடைய கஷ்டங்களை நீக்க சோசலிசபாதை தான் சிறந்தது. இன்றைய அரசாங்கம் தொழிலாளருடைய பிரச்னைகளை தீர்த்து வைக்கும். அதற்கு தொழிலாளர்களினது ஆதரவு நிறையவேண்டும் என்றும் கூறினர். (கொழு, நிரு.)

# தொழிலாளரின் பிரச்னை தீர்க்கும் அரசாங்கம் இது

— புதிய அரசாங்க அதிபர்

யாழ்ப்பாணம் புதிய அரசாங்க அதிபர் திரு. ரி. டபிள்யு அமரசேகராதமது பதவியை இங்கு ஏற்றபின்னர் முதன்முதலாக இவ்வைபவத்தில் கலந்து கொண்டு பேசுகையில்கூறியதாவது:-

யாழ். மாவட்டத்திலுள்ள எந்தப் பிரச்னையையும் என்னிடம் நேரில் கூறுங்கள். அதையிட்டு உடன் நடவடிக்கை எடுத்து இங்குள்ள சகல பிரச்னைகளையும் அகற்றி, இம்மாவட்டத்தை முன்னேற்றமடையச் செய்வேன்.

இன்றைய அரசாங்கம் தொழிலாளர் பிரச்னைகளையும், பாமர மக்களின் பிரச்னைகளையும்முற்றாக நீக்கி ஒரு சுபீட்சமான சமுதாயத்தை அமைக்க முயல்கிறது. இந்நிலையில் நான் இங்கு அரசாங்க அதிபராக வந்ததும், அதேகாலத்தில் தொழில் உதவி அமைச்சர் இங்கு விஜயம் செய்ததும், மகிழ்ச்சிக்குரியதாகும். பிரச்னைகளை நாம் தீர்த்தால் மட்டும் போதாது. தொழிலாளி, விவசாய, பாமர மக்கள் எமக்கு நல்லாதவு தரர வேண்டும்,

இங்குள்ள பிரச்னைகள்எனக்குத் தெரியாது. எனவே உங்கள் பிரச்னைகளை என்னிடம் கூறி மாகாண அபிவிருத்திக்கு உதவுங்கள்.

(4-ம் -க்கம் பார்க்க)

# "இந்த அரசாங்கம் முதலாளி வர்க்கத்தின் நண்பர்கள்"

யாழ்ப்பாணம், புதன்

"இன்றைய அரசாங்கம் தொழிலாளர்களின் முதுகில் மிதித்து ஆட்சியைக் கைப்பற்றி முதலாளிவர்க்கத்தின் நண்பர்களாக இருந்து வருகிறது, கீனாக்கொல்லைத் தோட்டத்தில் பொலிசாரால் சுட்டுக் கொலையுண்ட தோட்டத் தொழிலாளர்கள் இருவரும் இந்த அரசாங்கத்தின் அட்டூழியத்துக்குப் பலியானவர்கள்"

வடபகுதி தொழிற்சங்க சம்மேளனம் கீனாகொல்லைத் தோட்டச் சம்பவம் குறித்து அனுதாபம் தெரிவிக்குமுகமாக யாழ் நகரமண்டபத்தில் நடாத்திய அனுதாபக் கூட்டத்தில் பஸ் தொழிலாளர் திரு தர்மராசா பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்,

செங்கொடிச்சங்கப் பிரதிநிதி திரு ஓ ச இராசையா'

(4-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

ஸ்ரீகாந்தா அச்சக வெளியீடு: G. C. E. (O/L) வகுப்பு மாணவர்களுக்கு தமிழ் மொழி பகுதி I ; II புதுமுறை மாதிரி கை வினுக்கள் விலை ரூபா 3. ஸ்ரீகாந்தா அச்சகம்-புத்தகசாலை, 213, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். 2964

காரைநகர் சிவன்கோவிலடியில் 55 பரப்பு விஸ்தீரணமுள்ளதும் முதிர் பனைகளுள்ளதுமான திண்ணைக்கழி எனும் பெயருள்ள பனங்காணி விற்பனைக்குண்டு. விரும்புவோர் உடனே விண்ணப்பிக்கவும். விலாசம்: திருமதி நே. கணேசன், 317 A, நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 2969

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### புதன் 23—9—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25சைவநற்சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 8-00நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00தொழிலாளர் கேட்டவை, 1-00 கதம்ப இசை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 சங்கமம், 5-00 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-30 வளரும்பயிர்,

இரவு6-15இசைப்பயிற்சி, 7-00 வாத்தியஇசை, 7-15 பாட்டு, 7-45செய்திச்சுருள், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-40 நாதஸ்வரம், 10-30 செய்தித் தொகுப்பு.

வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

# அறிவித்தல்

நீர்வேலி ப. நோ. கூ. ச. சமாசத்தில் டீசல் லொறி ஒன்றின் பழைய "பொடி" விற்பனைக்கு இருக்கிறது. தேவையானோர் 27-9-70க்கு முன் விண்ணப்பிக்கவும். விபரங்கள் சமாசக் காரியதரிசியிடம் பெறலாம். 2468

## டிரக்டர் சாரதி தேவை

மேற்படி வேலைக்கான விண்ணப்பங்கள் லொறி ஓட்டும் லைசன்ஸ் உள்ளவர்களிடமிருந்து எம்மால் ஏற்கப்படும்.

தகைமைகள்:

அனுபவம் 5 வருடம்.

வயது- 25—35 வரை.

பிணை ரொக்கம் ரூபா 300/-.

சம்பளம்-

90-00—139-00 / 14 X 3-50 + அலவன்சுகளும்.

முடிவு திகதி- 3-10-70.

நற்சான்றுப்பத்திரங்கள் இரண்டின் பிரதி இணைக்கவும்.

ஒப்பம்
அ. சிவசுந்தரம்,
தலைவர்.
தென் யாழ்ப்பாணம்
ப. நோ கூ. ச. சமாசம்,
கிளிநொச்சி.

காரியதரிசி,
20-9-70. 2467

## அஞ்சல் ஒலி ஆசிரியர் குழு

வெள்ளவத்தை, செவ்.

இலங்கை அஞ்சல் எழுதுவினைஞர் சங்கத்தின் தொழிற்சங்கப் பத்திரிகையான 'அஞ்சல் ஒலி'யின் நடப்புவருட ஆசிரியராக திரு. க. பேரம்பலம் (நெல்லை க. பேரன்) நியமிக்கப்பட்டுள்ளார். உதவி ஆசிரியர்களாக திருவாளர்கள் ச. சு செபரத்தினம், ச. இரத்தினசாமி ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வெஸ்லி சினிமா
(மானிப்பாய்)
தினசரி 6-30, 10-00

ஜெய்சங்கர் - நிர்மலா
வாணிஸ்ரீ - மனோகர்
நடித்த

# "வறுமையை ஒழிக்க ஒன்று சேராவிடில் நாட்டையே வறுமை அழித்துவிடும்"

## இந்துக்கல்லூரி பரிசளிப்பு விழாவில் செனட்டர் நடேசன்

### "சிக்கன வாழ்க்கையை தமிழர் மேற்கொள்ள வேண்டும்"

யாழ்ப்பாணம, புதன்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிப் பரிசுத்தினம் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது. இவ்வைபவத்தில் செனட்டர் எஸ். நடேசன் கியு. ஸி. பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். 'பரிசளிப்புத்தினம் என்று நாங்கள் சொல்கிறோம். மேல்நாடுகளில் இதைப் பேருரைத் தினம் என்றுசொல்கிறார்கள். இப்படிச்சொல்வது தான் பொருத்தமாகத்தெரிகிறது' என்ற குறிப்புடன் பிரதம விருந்தினரான செனட்டர் நடேசனை உரையாற்றுவதற்கு அழைத்தார் கல்லூரி அதிபர் திரு. என். சபாரத்தினம்.

குமாரசாமி மண்டபத்தில் அலங்கார மேடையில் ஒருபுறத்தே அழகாகவும் ஒழுங்காகவும் அனுமார் வால் மாரி அடுக்கிவைக்கப்பட்டிருந்த நூல்களை. பெயர்கூப்பிட்டதும் சுணக்கமின்றிஒருவர்பின் ஒருவராக வந்த பரிசுக்குரியமாணவர்களுக்கு வட இந்துமகளிர் கல்லூரி அதிபர் செல்வி கே. சரவணமுத்து கால் கடுக்க நின்று (பரிசு பெற்ற மாணவர் கொஞ்சமல்ல!) பரிசுகளை வழங்கியதையும் அதன் பின்னர் மாணவர்களின் இன்னிசையையும், மிருதங்க இசையையும் பார்த்தும் கேட்டும் ரசித்துக்கொண்டிருந்த செனட்டர் நடேசன் ஒலி வாங்கியின் முன்வந்து தமது உரையை ஆரம்பித்தார்.

'கல்வி விஷயங்களில் அனுபவமுள்ளவர்கள்தான் பேசவேண்டும். 'நீங்கள் பேசுங்கோ நான் பரிசுகளைக் கொடுக்கிறேன்' என்று செல்வி சரவணமுத்துவிடம் கேட்டேன். அவர் பேசுவது தான் பொருத்தம் எங்கள் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பகுதிக்குத் தமிழ் மாணவர் தெரிவு சம்பந்தமாகதோன்றிள்ள பிரச்னைபற்றிகல்லூரி அதிபர் தமது அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதைத் தொட்டுக்காட்டி, ஆசிரியர் மாணவர்களின் திறமைக்கும் முயற்சிக்கும் இப்படி வீண் புரளியைக் கிளப்புவது துரதிர்ஷ்டம் என்று குறிப்பிட்டார். அவர்மேலும்பின் வருமாறு சொன்னர்:-

இவற்றுக்கெல்லாம் அடிப்படைப் பிரச்னை பொருளாதார நிலைதான். நாட்டில் பொருளாதாரவளம் குறைந்திருக்கிறது' எல்லாவற்றுக்கும் வறுமைதான் அடிப்படைக்காரணம், வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்திருக்கிறது. ஒரு சமூகம் முன்னேறுவதற்கு மற்றொரு சமூகத்தைப் பின்தள்ள வேண்டுமென்று நினைக்கிறார்கள். தமிழருக்குக் கிடைக்கும் வேலையைச் சிங்களவருக்குப் பறித்துக் கொடுக்கவேண்டுமென்று சிலர் நினைக்கிறார்கள். பொருள் விருத்தியைக் கூட்டுவதனால்தான் இப்பிரச்னையைத் தீர்க்கலாமேயொழிய ஒருவருடைய வாய்ப்பை மற்றவர்கெடுத்து முன்னேற முடியாது. வறுமைமிகக் கொடூரமானது. வறுமையை ஒழிக்கவேண்டும். வறுமைதான் கொலை, கொள்ளை. மது முதலிய சமூகக்கேடுகளுக்குப் பிறப்பிடம் வறுமையை ஒழிப்பதற்கு எல்லோரும் ஒன்றுசேர்ந்து போராடவேண்டும். வறுமையை ஒழிக்காவிட்டால் நாட்டையும் சமூகத்தையும் வறுமை அழித்துவிடும். நாண்டின் வறுமையை எதிர்த்துப்போராடுவதற்கு மக்கள் தங்கள் அறிவையும் உடல் வலுவையும் சமயம், இனம், மொழிவேறுபாடுகளின்றி எல்லோரும் ஒன்றுசேர்ந்து வறுமையை எதிர்த்துப் போராடினுல்தான் அதைவெற்றிகொள்ள முடியும்.

நட்புறவும் நல்லெண்ணமுமில்லாமல் பிரிந்து பிளவுபட்டு நின்றால் வறுமையை வெற்றிகொள்ள முடியாது. சிங்களவரின் அரிசியை தமிழர் பறிக்கிறார்களென்றும் சிங்களவரின் வேலைவாய்ப்பை இந்தியத்தமிழர்பறிக்கிறார்களென்றும் பேசுவதால் வறுமை தீராது. வறுமையையும் பொருளாதாரப் பிரச்னையையும் தீர்த்துவைக்க உருப்படியான நடவடிக்கை எடுக்கவேண்டும். உண்மை வழியால்தான் நன்மைகிடைக்கும் குறுக்குவழியால் தீமைதான்கிடைக்கும்.

தேசிய ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு சிறுவர்கல்வியிலிருந்து ஆரம்பிக்கவேண்டும் என்று கூறிய செனட்டர் நடேசன் பின்வருமாறு விளக்கம்கொடுத்தார்:-

பொருளாதார விருத்தி சிறுவர் கல்வியிலிருந்துவியாபிக்கவேண்டும். பழையன கழிந்து புதியன புகுதல் வேண்டும். கல்விக்கொள்கையின் உட்பொருள் என்ன? காலனி ஆதிக்ககாலக்கல்வி முறையை மாற்றி நமது தேவையை நிறைவேற்றக் கூடிய புதியமுறையைவகுத்துள்ளோமா?

பொருளாதார, கைத்தொழில் விருத்திக்கு வழிகாட்டக்கூடிய கல்விமுறைக்கு வழிகண்டிருக்கிறோமா?

இனவெறுப்பையும் குரோதத்தையும் வளர்த்துதேசிய ஐக்கியத்தைக் குலைக்கும் கல்வியைத்தான் போதிக்கிறோம்.

நாட்டில் ஐக்கிய[illegible] தூய மையைப் பாடசாலைகளிலிருந்துதான் வளர்க்கவேண்டும். பிரிவையும் பிளவையும் வளர்க்கும் அபாயகரமான சரித்திர பாடங்களையே புகட்டி வருகிறோம். சிங்கள மன்னர்களுக்கும் தமிழ் மன்னர்களுக்கு மிடையில் நடந்த போர்களையும் எந்த இடத்தில் எந்தவருடத்தில் சிங்களமன்னர் தமிழ் மன்னரைப் போரில் தோற்கடித்தார் என்பது பற்றியும் நமது பாடசாலைகளில் படிப்பித்துவருகிறோம். பிஞ்சு உள்ளங்களில் பிரிவையும் பிளவையும் தான் இவை ஏற்படுத்துகின்றன. சிங்கள மன்னர்களும் தமிழ் மன்னர்களும் ஒற்றுமையாக வாழ்ந்த நிகழ்ச்சிகளை, நல்ல செய்திகளை எடுத்துச் சொல்லவில்லை. இலக்கியம், கலை, சிற்பம் ஒருங்கமைந்த பண்பாட்டை நாம் கல்லூரிகளிலிருந்து தான் மக்கள் மனதில் ஊட்டமுடியும். சிங்களக்கலை, சிற்பம் பற்றி உலகுக்கு எடுத்துக்கூறிய கலாஜோதி ஆனந்தக்குமாரசாமியைப் பற்றி சிங்கள மாணவர்கள் அறிந்திருக்கிறார்களா?

பகைமையைப்பற்றிமாணவர்களுக்குப் படிப்பிக்கிறோம்; ஒற்றுமையைப் பற்றிப் படிப்பிக்கவில்லை. ஒற்றுமையை வளர்ப்பதற்காக பழைய சரித்திரத்தையே மாற்றியமைக்கலாம். தேவையானால் புதிய சரித்திர நூல்கள் எழுதப்படவேண்டும். சோஷலிஸ நாடுகள் பல இதைச் செய்திருக்கின்றன. கல்வி மனிதனின் பரிபூரண வளர்ச்சிக்கு வித்திடவேண்டும் சகிப்புத் தன்மையை வளர்க்கவேண்டும்.

கல்லூரிகள் ஒற்றுமைக்கும் கூட்டுமுயற்சிக்கும் வழிகாட்ட வேண்டும்.

#### "இந்தியாவிலிருந்தே வந்தோம்"

இந்திய நூல்கள், பத்திரிகைகள் தடைபற்றியும், பொதுவாக இங்கு நடைபெறும் இந்தியத் துவேஷப் பிரசாரம் பற்றியும் செனட்டர் நடேசன் நாசூக்காகத் தமது பேச்சில் தொட்டுக்காட்டினர்.

"நாமெல்லோரும் இந்தியாவிலிருந்தே வந்தோம் சிங்களச் சகோதரர் சிலருடைய பெயர்கள் தென்னிந்தியப் பெயர்களுடன் ஒத்ததாக இருப்பது இதற்கொரு சான்று. உணவு உடை, வாழ்க்கை முறையிலும், இந்தியாவில் உள்ளவர்களுக்கும் நம் நாட்டினருக்குமிடையில் அதிக வேறுபாடில்லை. கதிர்காமத்துக்கு தமிழரும் சிங்களவரும் சென்று வழிபடுகின்றனர். பொது வைபவங்கள், சமய நிகழ்ச்சிகளில் தமிழரும், சிங்களவரும் குத்துவிளக்குக் கொழுத்துகின்றார்கள். இந்தக் குத்துவிளக்கு தென்னிந்தியாவிலிருந்து வந்தது தான்."

விஞ்ஞானக் கல்வி பற்றிக் குறிப்பிட்ட செனட்டர் நடேசன், கலைச்சொல்லாக்கம் பற்றியும் பின்வருமாறு கூறினர்.

எங்கள் நாட்டில் நூதனமான கலைச்சொற்கள் சில ஆக்கப்பட்டிருக்கின்றன. இவை யாருக்கும் விளங்க மாட்டா, விஞ்ஞானம் மேல் நாட்டில் வளர்ந்துவருகின்றது. அந்தச் சொற்களைச் சிங்கள மக்களும் பயன் படுத்துகிறார்கள். தென்னிந்தியாவிலுள்ள தமிழரும் பயன்படுத்துகிறார்கள், உலக நாடுகள் பலவும் பயன் படுத்துகின்றன. இந்தக் கலைச் சொற்கள் பிற தேசங்களுடன் ஒத்ததாக இருக்க வேண்டும். தனித் தமிழில் கலைச்சொற்கள் தயாரித்தால் நமது மக்கள் கிணற்றுத் தவளைகளாகத்தான் இருக்கவேண்டும்.

சரித்திரம் ஒருபுறமிருக்க கலைச் சொல்லாக்கம் மிகப் பிரதானமான விஷயம். இதில் ஆசிரிய சங்கங்கள் கவனம் செலுத்தவேண்டும். பொதுவான கலைச்சொற் சூழ்ச்சிகளுக்கும் விட்டுவிடக் கூடாது.

#### சிக்கனம் வேண்டும்

வேலை வாய்ப்பின்மை பற்றியும் தமிழரின் எதிர்காலம் பற்றியும் குறிப்பிட்ட செனட்டர் நடேசன் பின் வருமாறுகூறித் தமது உரையை முடித்தார்:-

அரசாங்கத்தில் ஒரு சிலருக்கு உத்தியோகம் கிடைத்துவிட்டால் வேலையில்லாப் பிரச்னை தீர்ந்துவிடாது. அடுத்த இருபத்தைந்து வருடங்களில் அநேக வில்லங்கங்களிருக்கும். எந்த அரசாங்கமானாலும் வேலையில்லாப் பிரச்னையைத் துரிதமாகத் தீர்க்குமென்று எதிர்பார்க்க முடியாது. பெரும்பான்மை மக்களின் வாக்குகளினல் ஆட்சிக்குவரும் அரசாங்கம் அந்த மக்களுக்கு உதவக் கடமைப்பட்டுள்ளது தமிழர்களும் மற்றும் சிறுபான்மை மக்களும் அதிக கஷ்டத்தை எதிர்நோக்கவேண்டிய காலம்.

கஷ்டங்களை உணர்ந்து சமூகத்துக்கு வேண்டிய நன்மைகளைச் செய்யவேண்டும். வாழ்க்கையை கூடியளவு இலகுவாக, எளிமையாக, சிக்கனமாக அமைத்துக் கொள்ள வேண்டும். ஆடம்பரச் செலவுகளைக் குறைக்க வேண்டும்.

எதற்கும் அரசாங்கத்தையும் ஆட்சிமன்றப் பிரதிநிதிகளையும் நம்பியிருக்கக் கூடாது. நமது வலிமையையும் ஒற்றுமையையும் கடின

(4-ம் பக்கம் பார்க்க

## திறக்கப்பட்டது

உடுப்பிட்டி, செவ்

துன்னாலை சதா சகாய மாதா கோவிலின் புதிய கட்டிடத்தைத் துணை ஆயர் வண அன்ரனி ஆண்டகை திறந்து வைத்தார். அங்கே முதற் பூசையையும் துணை ஆயர் ஒப்புக் கொடுத்தார். கரவைக் கட்டளைக் குரவர் வண. சிங்கராய அடிகளார்

## இன்றைய பலன்

புரட்டாதி மாதம் 7-ம்திகதி (23-9-70)

மேஷம்- எதிலும் புதுமையைக் காண விரும்புவீர்கள். சிலருக்கு புதுமனை கட்டுவதிலும் ஆர்வம் தோன்றும்

ரிஷபம்- தடைகளின் தாக்குதல் உங்களைத் திகைக்க வைக்கும். வழக்கு விவகாரங்களைத் தவிர்த்துக் கொள்ளவும்

மிதுனம்- மனப் போராட்டம் அதிகரிக்கும் உறவினர் ஒருவர் மீது ஆத்திரம் பிறக்கலாம் பொறுமை நன்று.

கடகம்- இல்லத்தில் இன்று இனிமையான சம்ப


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வெஸ்லி சினிமா (மானிப்பாய்)
தினசரி 6-30, 10-00
ஜெய்சங்கர் - நிர்மலா
வாணிஸ்ரீ - மனோகர்
நடித்த
**காதலித்தால் போதுமா?**

ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
ஜெமினி — பத்மினி — நாகேஷ்
ஜெய்சங்கர் — வாணிஸ்ரீ
நடித்த
**எதிர்காலம்**

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெமினிகணேசன் — ராஜஸ்ரீ
ஜெய்சங்கர்-நிர்மலா- நாகேஷ்
நடித்த
**பூவா தலையா**

கெப்பிட்டல் (கொழும்பு)
பிளாஸா (வெள்ளவத்தை)
வெலிங்டன் யாழ் நகர்
(2-30, 6-30, 9-30)
தாய்க்குலத்தின் பெருமைக்கும் தமிழகத்தின் மாண்புக்கும் உதாரணமாய் வாழ்ந்த விஜயாவின் உள்ளத்தை உருக்கும் கண்ணீர் காவியம்.
உணர்ச்சி ஒவியம் . . .



ஸ்ரீ விநாயகா சுப்ரீயா கம்பைன்ஸ்
**துலாபாரம்**
(தமிழ்)
★ ஏ.வி.எம்.ராஜன்
இந்திய ஜனாதிபதியின் 'ஊர்வசி' பரிசுபெற்ற ★ சாரதா
காஞ்சனா, முத்துராமன், ரி. எஸ். பாலையா, நாகேஷ், சுந்தரராஜன், பேபி ரோஜாரமணி
டைரக்ஷன்: வின்ஸன்ட்
(1969-ம் ஆண்டின் சிறந்த இயக்குனர்)


வேண்டும். 'நீங்கள் பேசுங்கோ நான் பரிசுகளைக் கொடுக்கிறேன்' என்று செல்வி சரவணமுத்துவிடம் கேட்டேன். அவர் பேசுவது தான் பொருத்தம் எங்கள் நாடு பெண்ணரசு! ஆனால் அவ மறுத்துவிட்டா' என்று தனது பேச்சை ஆரம்பித்தார் செனட்டர் நடேசன்.

இந்தக் கல்லூரியில் தான் படித்தகாலத்தை நினைவுபடுத்திய அவர், அந்த நாளில் 'நான் ஏதேனும் பரிசு பெற்றதாக எனக்கு நினைவில்லை. வகுப்பில் ஐந்து பிள்ளைகளுக்குள் வந்ததாகவும் எனக்கு நினைவில்லை அப்படிவந்திருந்தால் என் தகப்பனாரே எனக்குப் பரிசு கொடுத்திருப்பார்' என்று செனட்டர் நடேசன் குறிப்பிட்டுச் சபையைச் சிரிக்க வைத்தார். 'இதையேன் சொல்கிறேனென்றால், இங்கு மாணவர்கள் பலர் பரிசு பெற்றார்கள். பரிசு பெறாதவர்கள் கவலைப்படாமலிருக்கவே, பரிசுபெறாத மாணவர்களைப் பற்றியும் புகழ்ந்து பேசினேன். இதற்காக பரிசு பெற்றமாணவர்களைக் குறைவாகச் சொல்லவில்லை' என்று அவர் ஆறுதல் கூறினார்.

இந்தப் பீடிகையின் பின்னர் தமது உரையைநிகழ்த்தத்தொடங்கிய செனட்டர் நடேசன், பேராதனைப்பல்க

...க்காவிட்டால் நாட்டையும் சமூகத்தையும் வறுமை அழித்துவிடும். நான்ட்ன் வறுமையை எதிர்த்துப்போராடுவதற்கு மக்கள் தங்கள் அறிவையும் உடல் வலுவையும் பயன்படுத்த வேண்டும். எதிர்காலம் மிககஷ்டமான காலம் என்றே நான் நினைக்கின்றேன். வறுமையை எதிர்த்து மக்கள் போராட வேண்டும் தலைவர்களால் மட்டும் இதை ஒழிக்க முடியாது அமைச்சர்களின் தீர்மானங்களாலும் ஆட்சிமன்றத்திலும்பொதுமேடைகளிலும் பேசுவதாலும் இதைச் சாதிக்கமுடியாது. மக்களால் தான் சாதிக்க முடியும் சாதி

...னவெறுப்பையும் குரோதத்தையும் வளர்த்துதேசிய ஐக்கியத்தைக் குலைக்கும் கல்வியைத்தான் போதிக்கிறோம்.

நாட்டில் ஐக்கியமும் தூய சமத்துவமும் ஏற்பட கல்லூரிகள் முக்கிய பங்கு வகிக்க வேண்டும். தேசிய ஒற்று...

...வண அன்ரனி ஆண்டகை திறந்து வைத்தார். அங்கே முதற் பூசையையும் துணை ஆயர் ஒப்புக் கொடுத்தார். கரவைக் கட்டளைக் குரவர் வண. சிங்கராய அடிகளார் இத்தேவாலய உற்சவங்களைச் சிறப்பாக நடாத்தி வைத்தார்.

...சரித்திரம் ஒருபுறமிருக்க கலைச் சொல்லாக்கம் மிகப் பிரதானமான விஷயம். இதில் ஆசிரிய சங்கங்கள் கவனம் செலுத்தவேண்டும். பொதுவான கலைச்சொற்களை உருவாக்கவேண்டும். இதில் தனித் தமிழை வைத்துக்கொண்டிருப்பது எனக்குச் சரியாகத் தோன்றவில்லை.

தேசிய ஒற்றுமை பற்றிக் குறிப்பிட்ட செனட்டர் நடேசன், சாதிப் பிரச்னை பற்றியும் எடுத்துக்கூறினார். சாதி என ஒன்றில்லை என்று கூறிய அவர், சம உரிமைக்காக வாதாடும் மக்கள் மற்றொரு பகுதியினருக்கு உரிமை வழங்காமலிருக்கலாமா என்று கேட்டுவிட்டு சாதி என்னும் பேயை இந்துசமயிகள் நாட்டிலிருந்து அகற்றவேண்டியது முக்கிய கடமை என்றார்.

### போதனமொழி

போதனமொழி பற்றிக் குறிப்பிடுகையில் செனட்டர் நடேசன் பின்வருமாறு கூறினார்:

கல்வியில் மூலாதாரமான உரிமை ஒரு குழந்தையின் போதனமொழி, அதன் தாய்மொழி என்பதுதான். தாய்மொழியே போதனமொழி என்பது சகல தேசங்களிலும் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம். இந்த உரிமையில் பிரவேசிக்க நயவஞ்சகமான முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. குழந்தையின் உரிமையை, யாருக்கும் எந்த நயவஞ்சக

## ஸ்கந்தா வெற்றி

சுன்னாகம், செவ்வாய்

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கும் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரிக்கும் இடையில் ஸ்கந்தா மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்ட முதல் பிரிவு போட்டியில் ஸ்கந்தா வீரர் இரண்டு கோல்களால் வெற்றி ஈட்டினர்.

இரண்டாவது பிரிவுக் கோஷ்டியினருக்கிடையில் நடைபெற்ற போட்டியில் ஸ்கந்தா வீரர் நான்கு கோல்களும் ஹாட்லி 2 கோல்களும் பெற்று ஸ்கந்தா வீரர் வெற்றி ஈட்டினர்.

சினிமா விமர்சனம்

## காதலித்தால் போதுமா?

மூன்று வயதில் காணாமல் போன தனது மகனைக் கண்டுபிடித்துத் தரும்படி மனோகரைக் கேட்டு அவருக்குப் பணத்தை அள்ளி அள்ளி கொடுக்கிறார் ராகவன். மனோகரும் கொண்டு வந்து நிறுத்துகிறார் ஆதித்தனை. இதற்கிடையில் இவன் தான் உங்கள் மகன் என்று கூறி ஜெய்சங்கரையும் கொண்டு வருகிறார் ஜெய்சங்கரின் தாய் இவர்களில் யார் ராகவனின் மகன்?

ஜெய்சங்கருக்கும் ராகவனுடைய வளர்ப்பு மகளுக்கும் திருமணம் நடக்கவிருந்த வேளையில் தான் ஜெய்சங்கருடைய மனைவி, அவர் வேறொரு பெண்ணைத் திருமணம் செயய விடமாட்டேன் என்று கூறி திருமணத்தையே தடுத்து நிறுத்துகிறார் வாணிஸ்ரீ. மனோகரின் சொல்லுக்கு கட்டுப்பட்டே அவர் இப்படி நடந்து கொண்டார் என்பது நமக்குத் தெளிவாகிறது. மெட்ராஸிலிருந்து ஊட்டிக்கு வந்த ஒருநாளில் எப்படி வாணிஸ்ரீ மனோகரை சிநேகமாக்கிக் கொண்டாரென்பது தான் தெரியவில்லை.

திருமணம் நடைபெறாமல் நின்று விட்டதே என்ற அவமானத்தால் ஜெய்சங்கர் வீட்டைவிட்டே ஓடுகின்றார்.

முடிவு என்ன?

மானிப்பாய் வெஸ்லி சினிமாவில் காட்சிதரும் ''காதலித்தால் போதுமா?'' படத்தைத்தான் பார்க்க வேண்டும். 'நான் முடிவைச் சொன்னால் ''சஸ்பென்ஸ்'' கெட்டு விடாதோ?

நகைச்சுவைக்கு தேங்காய் சீனிவாசன் உட்படப் பலர் இருக்கிறார்கள். தேங்காய் சீனிவாசன் நாடகமொன்றை டைரக்ட் பண்ணி மேடையேற்றுகிறார். கடைசியில் ரசிகர்களிடம் நன்றாக வாங்கிக் கட்டிக் கொண்டு ஓடிவிடுகிறார். இக்கட்டத்தில் சிரிப்பொலி கோட்டகையை அதிரச் செய்கிறது. ஊட்டிக்குச் செல்ல ஸ்ரேசனில் டக்கட்பெறும் போதே 'ஊட்டியில் என்ன விடம் சார்' என்று தேங்காய் கேட்கும் போது நம்மையறியாமலே சிரித்து விடுகிறோம். மொடர்ன் தியேட்டர்சாரின் படமல்லவா இது? புதுமையாயிருக்காமல் போகுமா? ஆங்கிலப் படங்களைப் போல் எடுத்திருக்கிறார்கள். எழுத்துக் காட்டும் போதே புதுமை தான். சண்டைக்கு குறைவேயில்லை. ஜெய்யும்-மனோகரும் மோதுகிறார்கள்.

கண்ணதாசனின் பாடல்களை சீர்காழி, சௌந்தரராஜன் ஆகியோர் பாடியுள்ளார்கள். 'காதல் பெண்ணே........' என்ற பாட்டு மனதில் நிற்கின்றது.

கண்ணுக்குக் குளிர்ச்சியும் கும்கும் குத்துக்களும் சிறந்த காட்சியமைப்பும், கொண்ட 'காதலித்தால் போதுமா' தொல்லைகளை மறந்து சிலமணிநேரத்தை நிம்மதியாகக் கழிக்க உதவுகிறது!

—சிந்தனைச்செல்வன்—

## யாழ். நகரில் நடந்த முதலாவது 'றகர்' போட்டி

யாழ்ப்பாணம், புதன்

யாழ். பொலிஸ் விளையாட்டு வார விழாவை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் முதன் முதலாக 'ரகர்' போட்டியொன்று நடைபெற்றது.

'ரகர்' போட்டியில் இலங்கையில் தலைசிறந்த கோஷ்டிகள் எனப் பெயர்பெற்ற இலங்கை பொலிஸ் கோஷ்டியும், ராணுவத் தெரிவுக் கோஷ்டியும், இப்போட்டியில் மோதி யாழ்ப்பாணத்தின் 'ரகர்' சரித்திரத்தின் புதிய அத்தியாயத்தை ஏற்படுத்தினார்கள்.

இந்தப் போட்டியில் இரு கோஷ்டியினரும் மிகத்திறமையாகவே போட்டியிட்டனர் இடைவேளைக்கு முன்னதாகவே, பொலிஸ் கோஷ்டியினர் எட்டுப்புள்ளிகளை சேகரித்துவிட்டனர் இடைவேளையின் பின் ராணுவக் கோஷ்டியினர் மிகதுரிதமாகவும், சாமர்த்தியமாகவும் விளையாடிஎட்டுப்புள்ளிகளைச் சேகரித்தார்கள் ஆட்ட இறுதியின்போது இருகோஷ்டியினரும் 8—8 புள்ளிகளைப் பெற்றமையால் ஆட்டம் சரிசமனாக முடிவடைந்தது.

யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்ற இப்போட்டிக்கு யாழ். பொலிஸ்நிலைய இன்ஸ்பெக்டர் திரு. சிவேந்திரன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

யாழ். மாவட்ட நீதிபதி ஜனாப் எச் எம் இஸ்மாயில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

(தே நி)

## ஹாட்லி வெற்றி

மாவிட்டபுரம், செவ்வாய்

தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கும்பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்குமிடையே சிநேகபூர்வமாக நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் இருபிரிவிலும் ஹாட்லி வென்றது.

ஹாட்லி முதலாம் பிரிவில் 3—2 கோலாலும், 2-ம் பிரிவில் 2—1 கோலாலும் யூனியன்கல்லூரியை வெற்றியீட்டியது. இப்போட்டி ஹாட்லி கல்லூரியில் நடைபெற்றது.


ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 6-30, 9-30
ஜெய்சங்கர்-கே. ஆர் விஜயா
நாகேஷ்-மாதவி
நடித்த
**முகூர்த்தநாள்**

ஸ்ரீகாலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 9-30
போயா, பிரீபோயா 2-30
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
நடித்த
**திருடாதே**

MANOHARA
Jaffna
Daily: 4-45, 7&9-45p.m.
Poya, Prepoya 4 Shows
Rayan O'Neal
in
THE BIG BOUNCE
(Color)

REGAL
Jaffna
Daily: 4-45, 7&9-45 p.m
Poya, Prepoya 4 Shows
Clint Eastwood,
Lee Van Cleef
in
THE GOOD, BAD, AND THE UGLY


...மிதுனம்- மனப் போராட்டம் அதிகரிக்கும் உறவினர் ஒருவர் மீது ஆத்திரம் பிறக்கலாம் பொறுமை நன்று.

கடகம்- இல்லத்தில் இன்று இனிமையான சம்பவங்கள் இடம்பெறலாம். சிலர் வாழ்க்கையில் அதிர்ஷ்ட லாபங்களும் கிடைக்கலாம்.

சிம்மம்- பக்கத்தில் படுகுழி தோண்டுவதற்கு எதிரிகள் முனைவர். அடக்கம் வேண்டும்.

கன்னி- பாதையில் பழுதுண்டு பகைவரும் காத்திருப்பர் உணவு விடயத்தில் கவனம் வேண்டும்.

துலாம்- பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவர், குடும்பத்தில் சுமுகமான நிலை தென்படும்

விருட்சிகம்- பகை மூட்டத்தின் மத்தியில் வாழ்ந்து கொண்டு இருக்கிறீர்கள் காதல் சிட்டுக்கு கன குஷியான தினம்.

தனுசு- மன நிறைவுக்கு இடமுண்டு, சிலர் வாழ்க்கையில் திடீர் திருமணம் நடைபெறலாம். சுபதினம்

மகரம்- பல வழிகளிலும் பணம் பாழாகும். எதையும் தாங்கும் இதயம் வேண்டும்

கும்பம்- மனம்போல் வாழ்வும் மலரும். சிலருக்கு பதவி உயர்வுக்கும் இடம் உண்டு.

மீனம்- புதிய தொழில் குறித்து சிந்தனை உருவாகும் பண பலமும் உண்டு.

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை


**அடிக்கு ரூ. 15-00**
**வீதத்திற்குமேல் சேமியுங்கள்**
உள் உறுஞ்சி வெளிவிடும் பைப்புகளுக்கு வளைந்து கொடுக்கும் தன்மையுள்ள அல்கதீன் பாவிப்பதன் மூலம் சேமியுங்கள்.
தண்ணீர் அடிமட்டம் குறைந்த இடங்களிலுள்ள விவசாயிகளுக்கு ஓர் வரப்பிரசாதம்.
நீங்கள் விரும்புவதற்கான காரணங்கள்:—
1. வளைந்துகொடுக்கும் தன்மை—சுருள்போல் வளைந்துகொடுக்கக்கூடிய அல்கதீன் எந்த நீர் பாய்ச்சு முறைக்கும் உகந்தது.
2. சிறந்த செயல்முறை—அமுக்க வேலைகளுக்கும் ஆகர்ண சக்தி உள்ள வேலைகளுக்கும் நேர்த்தியானது.
3. சிக்கனமானது—அல்கதீன் நீடித்துழைப்பது. மற்றைய தயாரிப்புகளைவிட மிகவும், மிகவும் மலிவானது.
கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ் (கொழும்பு) லிமிட்.
தபாற் பெட்டி நிர். 352, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்லரசுகளை உதவிக்கு அழைக்கிறார் மன்னர் ஹுசேன்

## சண்டை நிறுத்த உத்தரவை ஏற்க கொமாண்டோக்கள் மறுப்பு

### அமெரிக்க படைகளுக்கு உஷார் உத்தரவு

அம்மான், செப். 22

ஜோர்டானில் ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து மன்னர் ஹுசேன் நான்கு வல்லரசு நாடுகளுக்கும் செய்தி அனுப்பியிருக்கிறார்.

அம்மானில் சண்டையை நிறுத்தும்படி மன்னர் ஹுசேன் தமது படைகளுக்கு உத்தரவிட்டிருக்கிறார். ஆனால் இந்தச்சண்டை நிறுத்தத்தை கொமாண்டோக்கள் புறக்கணித்து விட்டார்கள்.

ஜோர்டானிலுள்ள அமெரிக்க பிரஜைகளை அப்புறப் படுத்துவதற்கு அவசியமானல் அதற்குத்தயாராய் இருக்கும்படி உள் நாட்டிலும் மேற்கு ஜெர்மனியிலும் உள்ள தனது படைகளுக்கு அமெரிக்க அரசாங்கம் உத்தரவிட்டிருக்கின்றது.

ஜோர்டானில் ஏற்பட்டுள்ள நெருக்கடியில் தலையிட்டு, ஜோர்டானுக்குள் புகுந்துள்ள சிரியா படைகள் வாபஸாவதற்கு தமது செல்வாக்கைப் பிரயோகிக்கும்படி மன்னர் ஹுசேன் நான்கு வல்லரசுகளையும் கேட்டிருக்கிறார்.

சிரியா படைகள் ஜோர்டானுக்குள் புகுந்திருப்பதாகக் கூறப்படுவதை சிரியா தொடர்ந்து மறுத்துவருகின்றது. ஜோர்டானுக்குள் சிரியா எல்லையிலிருந்து புகுந்த படைகள் தமது அணிகளைச் சேர்ந்தவைதான் என்று பாலஸ்தீன கொமாண்டோக்கள் கூறுகிறார்கள்.

### மன்னர் உத்தரவு

அம்மானில் சண்டையை நிறுத்தும்படி மன்னர் ஹுசேன் நேற்று உத்தரவிட்டார். சண்டை தொடங்கிய பின்னர் மன்னர் இவ்வாறு தம் பெயரில் வெளிப்படையாக துருப்புகளுக்கு கட்டளை பிறப்பித்திருப்பது இதுவே முதல் தடவை. தனது உள்உணர்வும் நாட்டின் மீதுள்ள கடமைப் பற்[illegible]

இருக்கிறார்கள் சுமார் 40 பேர் கொமாண்டோக்களால் காவலில் வைக்கப்பட்டுள்ளனர் இவர்கள் பத்திரமாக இருப்பதாக கொமாண்டோக்கள் அறிவித்துள்ளனர்.

### மன்னர் ஹுசேன்

அம்மான், செப். 22

ஜோர்டான் மன்னர் ஹுசேன் இன்று பத்திரிகைச் செய்திகளின் தலைப்புக்குரியவராக இருந்துவருகிறார். முடியரசு நடைபெறும் நாடுகள் எல்லாவற்றையும் விட மிக நெருக்கடியான ஒரு சூழ்நிலைக்குள்ளாகியிருக்கும் ஒரே மன்னர் இவர்தான்.

மனநோய்க்குள்ளாகியிருந்த தனது தந்தையிடமிருந்து மன்னர் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதிலிருந்து சுமார் 17 ஆண்டுகள் மன்னர் ஹுசேன் பதவியிலிருந்துள்ளார். அதற்கு முன்னர் ஹுசேனின் மாமனார் மன்னர் அப்துல்லா இவர் கண் முன்னாலேயே ஜெருசலம் மசூதியொன்றில் வைத்து படு[illegible]

பொலிசாரின்

### துப்பாக்கிப் பிரயோகத்தில் 11 பேர் கொலை

பம்பாய், செப். 22

மத்திய பம்பாயில் இருதரப்பினர் மோதலை அடுத்து பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 11 பேர் கொல்லப்பட்டனர்; பலர் காயமடைந்தனர்.

ஒரே இனத்தைச் சேர்ந்த இருகோஷ்டிகள் சோடாப் போத்தல், கற்கள் ஆகியவற்றால் தாக்கின. இவர்களைக் கட்டுப்படுத்த பொலிசார் இக்கோஷ்டிகள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து கலகத்தை அடக்கினார்கள். இக்கோஷ்டிச் சண்டை பம்பாயின் பல இடங்களிலும் பரவி வருவதால், பம்பாயில் ஒருவார காலத்திற்கு 5 பேருக்கு மேல் எவ்விடத்திலும் கூட்டமாக நிற்கக்கூடாதென பொலிசார் தடையுத்தரவு பிறப்பித்துள்ளனர்.

......

### சீமெந்தும் புளியும்

[illegible]

## 'யாழ். தொழில் கந்தோரில் சிங்கள ஊழியரை நியமிக்குக'

### ஊழியர் அமைச்சரிடம் மகஜர்

மாவிட்டபுரம், செவ்.

'யாழ். தொழிற்கந்தோரில் சிங்கள ஊழியர்களை நியமிக்கும்படி தொழில் உதவி அமைச்சரை யாழ். தொழிற்கந்தோர் ஊழியர்கள் மகஜர் மூலம் கோரியுள்ளனர்.

தொழிற் கந்தோருக்கு விஜயம் செய்த உதவி தொழில் அமைச்சர் திரு எச். எஸ். சிறிசேனவிடம் சமர்ப்பித்த மகஜரில் கூறப்பட்டுள்ளதாவது:-

கொழும்பில் இருப்பது போல் யாழ்ப்பாண நகரிலும் வடமாகாணத்துக்குப் பொதுவான இடத்தில் ஒரு விரிவான தொழிற் பயிற்சி நிலையத்தை அமைத்துத் தரவேண்டும். அத்துடன் இந்நிலையத்தில் வாலிபர் குறைந்த செலவில் தொழிற் பயிற்சி பெறக்கூடியதாகச் செய்யவேண்டும்.

யாழ் தொழிற்கந்தோரில் சிங்களம் தெரிந்த லிகிதர், தட்டச்சாளர் ஆகியோரை உடன் நியமிக்கவேண்டும். இங்கு ஒரு சிங்கள ஊழியர் மட்டுமே கடமையாற்றுவதால் மொழி பெயர்ப்பு போன்ற வேலைகள் செய்வதில் தாமதம் ஏற்பட்டு வருகிறது.

உதவி தொழில் அமைச்சரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திய கைத்தொழில்பொதுத் தொழிலாளர் யூனியன், அச்சுத் தொழிலாளர் யூனியன், சாய்ப்பு சிப்பந்திகள் சங்கம் ஆகியன கீழ்க்கண்ட கோரிக்கைகளை சமர்ப்பித்தன.

ஏனைய அரசாங்க ஊழியர் போன்று இன்சூரன்ஸ் திட்டம் ஒன்று இத்தொழிலாளருக்கு வழங்கப்படவேண்டும். தொழிலாளர்களுக்கு வழங்கப்படுவது போல லீவும், வைத்திய லீவும் வழங்கப்படவேண்டும். வருடாவருடம் சம்பள உயர்வு வழங்கப்படவேண்டும் ஒவ்வொரு மாதமும் தொழிலாளர்களை உதவி தொழில் ஆணையாளர் தமது காரியாலயத்தில் கூட்டி அவர்கள் பிரச்னைகள் பற்றி ஆராயவேண்டும்.

### உப்பள ஊழியர் மகஜர்

ஆனையிறவு, செவ்

மற்றும் இடங்களை விட உப்பளத்தில் வெயில் மிகக் கொடூரமானதென்றும், எனவே வெயிலுக்கு முன் வேலைகளை முடிக்கும் ஊழியர்களை வேளைக்கு வீடு செல்ல அனுமதிக்கவேண்டுமென்றும் வேலை முடிந்தவுடன் 'நம்பர்' வாங்க வேண்டுமென்ற பிரச்னையை உண்டாக்கி வேலைசெய்து களைத்துப் போய் நிற்கும் ஊழியர்களின் பொறுமையைச் சோதிக்காதவகையில் பெருந்த[illegible]மயாக வேலை முடிந்து[illegible] ஊழியர்களை அவரவர் வீடுகளுக்கு அனுப்ப உத்தரவு வழங்குமாறும் கோரி, ஆனையிறவு உப்ப[illegible] பத்தி[illegible] ஊழியர்க[illegible]ஸ்தாபன அதி[illegible]

### மின்சார வசதி

கைதடி, செவ்வாய்

கைதடிக் கிராமத்துக்கு மின்சாரம்வழங்குவதற்கான வேலைகள் நடைபெறுகின்றன. மின்சார இலாகா இதற்கான நடவடிக்கைகளில் துரிதமாக ஈடுபட்டுள்ளது.

கேரளத்தில்

## அச்சுதமேனன் தலைமையில் புதிய மந்திரிசபை அமையலாம்

திருவனந்தபுரம், செப். 22

கேரளத்தில் புதிய அரசாங்கம் யார் தலைமையில் அமைக்கப்படும் என்பது குறித்து பலவிதமான ஹேஷ்யங்கள் கூறப்படுகின்றன.

திரு. ஜெகஜீவன்ராம்தலைமையிலான இந்திரா காங்கிரஸ் கட்சிக்கே அதிகப்படியான பெரும்பான்மையிருந்த போதிலும், மாஸ்கோசார்பு கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரையே முதலமைச்சராக இருக்கும்படி இவர்கள் கேட்டுக்கொள்ளக் கூடும் என்று சொல்லப்படுகின்றது. கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் திரு அச்சுதமேனன் கலைக்கப்பட்ட சட்டசபையில் முதலமைச்சராகவிருந்து அனுபவம் பெற்றவர் என்பது போக புதிய தேர்தலுக்கான சரியான சூழ்நிலையை அவர் தோற்றுவித்தவர் என்றும் பாராட்டப்படுகின்றார்.

மேலும் முற்போக்குக் கொள்கைகளுக்கும் திட்டங்களுக்கும் தன்னைக்கட்டுப் படுத்திக்கொள்ளும் ஒரு ஜனநாயக அரசாங்கம் கேரளத்தில் ஏற்படவேண்டும் என்று தேர்தல் காலத்தில் இந்திரா காங்கிரஸ் தலைவர்கள் வற்புறுத்திவந்தார்கள். எனவே இந்திரா காங்கிரஸ் கம்யூனிஸ்ட் தலைமைக்கு எதிராகவிருக்காது என்று கூறப்படுகிறது. என்றாலும் காங்கிரஸ் கட்சிக்கே அதிகப் பெரும்பான்மை இருப்பதால் அதன் தலைவரான திரு. கே. கே. விஸ்வநாதனையே மந்திரிசபை அமைக்கும்படி கவர்னர் அழைப்பார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால் இறுதியான நிலைமை இன்னும் தெளிவாகவில்லை. இந்திரா காங்கிரஸின் கேரளத் தலைவர்கள் திரு கே, கே விஸ்வநாதனும், கே. கருணாகரனும் தற்பொழுது புதுடில்லியில் மத்திய தலைவர்களுடன் ஆலோசனைகளில் ஈடுபட்டுள்ளார்கள்.

1957 ல் கேரள மாநிலம் அமைக்கப்பட்ட பின்னர் நடந்த முதல் தேர்தலில் இந்திய தேசிய காங்கிரஸ் 43 இடங்களைப் பிடித்தது.

1960, 65, 67 வருடங்களில் அதன்பலம் முறையே 63,36,9 இறங்கியது காங்கிரஸ் பிளவுபட்ட பின்னர் திரு. நிஜலிங்கப்பா தலைமையிலான பழைய காங்கிரஸ் ஒரு இடத்தையும் ஜெயிக்கவில்லை. ஆனால் புதுக்காங்கிரஸ் 32 ஸ்தானங்களைப் பிடித்துக்கொண்டது

இப்பொழுதுள்ள நிலைமையில் இந்திரா காங்கிரஸ் கட்சியிலுள்ள அங்கத்தவர்களை விட வலது கம்யூனிஸ்ட் கட்சியின் கூட்டணியில் அதிக அங்கத்தவர்கள் இருப்பதை அவதானிகள் சுட்டிக் காட்டி வலது கம்யூனிஸ்ட் கட்சியே மந்திரிசபை அமைக்கும் பொறுப்பை ஏற்கக் கூடும் என்கிறார்கள். மேலும் வலது கம்யூனிஸ்ட் கூட்டணியில் முஸ்லிம்களுக்கு இருப்பதால் அதனுடன் இணைந்து மந்திரிசபை அமைத்தால் இந்திரா காங்கிரஸுக்கு இதர ராஜ்யங்களில் பாதகமான நிலைமை ஏற்படும் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. இதனால் இந்திரா காங்கிரஸ் மந்திரிசபைக்கு வெளியில் இருந்தே வலது கம்யூனிஸ்ட் கட்சி மந்திரிசபைக்கு ஆதரவு அளிக்கக் கூடும் என்று சொல்லப்படுகின்றது. இந்த ஹேஷ்யங்கள் எல்லாம் தற்காலிகமானதே.

### தி. மு. க, தோல்வி

கேரளத் தேர்தலில் திராவிட முன்னேற்றக்கழகம் போட்டியிட்டுத் தோல்வியடைந்தது பற்றி தமிழ்நாடு முதலமைச்சர் திரு. கருணாநிதி பின்வருமாறு கூறியிருக்கிறார்.

'ஒருகாலத்தில் அங்கு ஆட்சிபுரிந்த சிண்டிகேட் காங்கிரஸ் தலைவர்கள் ஒன்றுமில்லாமல் போய் விட்டார்கள்' நாங்கள் இப்போதுதான் அங்கு அடி எடுத்து வைத்திருக்கிறோம். புதுச்சேரியில் ஒரு முறை போட்டியிட்ட தி. மு. கழகம் எல்லா தொகுதிகளிலும் ஜாமீனை இழந்தது. அப்பொழுது அங்கு பிரசாரத்தின்பொருட்டுத் தான் போட்டியிட்டோம், அதன் விளைவாகஇன்றுபுதுவை மாநிலம்திமுக ஆட்சியில்இருக்கிறது. கேரளத்தில் சிண்டிகேட்டின் நிலை அவ்வாறல்ல, அங்கு கூட்டணியுடன் சேர்ந்து சிண்டிகேட் சுமார் 40 இடங்களில் போட்டியிட்டது. அங்கு அவர்களுக்கு மாபெரும் தோல்வி எற்பட்டிருக்கின்றது. நாங்கள் எந்தக் கூட்டணியிலும் சேராமல் பிரசார அடிப்படையில்தான் போட்டியிட்டோம்

......

### 500 புகார்கள்

கோட்டை, செவ்வாய்

லஞ்ச ஊழல் விசாரணைக் கமிஷனரின் இலாகாவுக்கு உள்ளூராட்சி மன்றங்களில் லஞ்ச ஊழல்கள் நடைபெறுவதாக நேற்று முன்தினம் 500-க்கு மேற்பட்ட புகார்கள் கிடைத்துள்ளன என லஞ்ச ஊழல் விசாரணை ஆணையாளர் திரு. ஜெ. ஜி. ரி. வீரரத்ன தெரிவித்துள்ளார்.

மேற்படி புகார்கள் குறித்து தனது அதிகாரிகள் விசாரணை நடாத்தி வருகிறார்கள் எனவும் முன்னர் புகார் செய்பவர்கள் தங்கள் பெயர்களைத் தெரிவிப்பதில்லை தற்போது நாங்கள் அவர்களுக்குப் பூரணபாதுகாப்பு அளிப்போமென வாக்குறுதியளித்ததைத் தொடர்ந்து தற்போது புகார் செய்பவர்கள் தங்கள்பெயர்களையும் குறிப்பிட்டுள்ளார்கள்எனவும் திரு. ஜெ,ஜி,ரி.வீரரத்ன மேலும் தெரிவித்துள்ளார்.

......

### தந்திக்கம்பி களவு

பூநகரி, செவ்வாய்

பூநகரி கிளிநொச்சி வீதியில் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டட்டார். சண்டை தொடங்கிய பின்னர் மன்னர் இவ்வாறு தம் பெயரில் வெளிப்படையாக துருப்புகளுக்கு கட்டளை பிறப்பித்திருப்பது இதுவே முதல் தடவை. தனது உள்உணர்வும் நாட்டின் மீதுள்ள கடமைப் பற்றும் இவ்வாறு உத்தரவிடத் தூண்டியதாக மன்னர் வானொலியில் விடுத்த ஒரு செய்தியில் கூறினார்.

மன்னர் தமது படைகளுக்கு இவ்வாறு உத்தரவிட்ட போதிலும் கொரில்லாக்கள் இதனைப் புறக்கணித்து விட்டார்கள். வடக்கு ஜோர்டான் பகுதி தம்வசமிருப்பதாக அவர்கள் கூறுகிறார்கள். இப்பகுதியில் நேற்று தாங்கிகள் மூலம் இரு தரப்பினரும் மோதிக் கொண்டதாகச் செய்திகள் கூறின.

அம்மானில் நகரம் இப்பொழுது முற்றாக அரசாங்கப் படைகளின் வசம் இருக்கின்றதாம். சில இடங்களில் ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்டுள்ளது.

## அமெரிக்கா உஷார் ஏற்பாடு

ஜோர்டான் நிலைமை குறித்து நேற்று அமெரிக்க அதிபர் திரு. நிக்ஸன் ஆலோசனைகள் நடத்தினார். ஜோர்டானிலுள்ள யு. எஸ். பிரஜைகளை அப்புறப்படுத்தவேண்டிய நிலைமை யேற்பட்டால் அதற்கு ஆயத்தமாய் இருக்கும்படி அமெரிக்காவிலும் மேற்கு ஜெர்மனியிலுமுள்ள தனது படைகளுக்கு அமெரிக்கா உத்தரவிட்டிருக்கின்றது.

## கெய்ரோவில் மாநாடு

ஜோர்டான் நிலைமை குறித்து கெய்ரோவில் இன்று அரபு நாட்டுத் தலைவர்கள் பலர் அவசரமாகக் கூடி ஆலோசனைகள் நடத்துகிறார்கள். இந்த மாநாட்டில் ஜோர்டான் மன்னர் ஹுசேன் கலந்து கொள்ளமாட்டார் அவருக்குபதில் பிரதம மந்திரி பிரிகேடியர் தாவூத் கலந்துகொள்வார். பாலஸ்தீன விடுதலை இயக்கமான அல்பத்தாஹ்வின் தலைவர் யாசர் அரபாத் இந்த மாநாட்டில் கலந்து கொள்வாரா என்று தெரியவில்லை அல்ஜீரியா, ஈராக், மொராக்கோ போன்ற நாடுகளும் இதில் கலந்து கொள்ளமாட்டா என்று தெரிகின்றது. சிரியா அதிபர் ஜெனரல் அத்தாஸி இப்பொழுது கெய்ரோவில் தான் இருக்கிறார் என்றாலும் அவரும் இந்த மாநாட்டில் பங்குபற்ற மாட்டார் என்று அறிவிக்கப்பட்டது.

ஜோர்டனில் தற்பொழுது சுமார் 400 அமெரிக்கர்கள்

திலிருந்து சுமார் 17 ஆண்டுகள் மன்னர் ஹுசேன் பதவியிலிருந்துள்ளார். அதற்கு முன்னர் ஹுசேனின் மாமனார் மன்னர் அப்துல்லா இவர் கண் முன்னாலேயே ஜெருசலம் மசூதியொன்றில் வைத்து படுகொலை செய்யப்பட்டார். 35 வயதான இம்மன்னரின் வாழ்க்கை பூராவுமே நெருக்கடி மிக்கதாக இருந்து வந்துள்ளது. பாலஸ்தீன கொமாண்டோக்கள் இவருக்கு பெருந்தலையிடியைக் கொடுத்து வருகிறார்கள். இப்போதுள்ள நிலைமையில் இவர் பதவி துறந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

டமாக நிற்கக்கூடாதென பொலிசார் தடையுத்தரவு பிறப்பித்துள்ளனர்.

......

## சீமெந்தும் புளியும்

அம்பன், செவ்.

பருத்தித்துறையிலுள்ள சில கடைகளில் ரூபா 11-25 சதம் விற்பனை செய்யப்பட்டுவந்த ஒரு பைக்கற் சீமந்து தற்சமயம் ரூபா 13 ஆக விற்கப்படுகிறது. ரூ. 1-30 சதம் விற்றுவந்த ஒரு றாத்தல் புளி தற்சமயம் 4 ரூபாவாக விற்கப்படுகிறது

# ‘அடிப்படை உரிமைகளைத் தழுவிஎழுதப்படல்வேண்டும்’

யாழ்ப்பாணம், செவ்

‘மெய்கண்டதேவர் முதலிய சந்தான குரவர்களும் திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் முதலிய சமயகுரவர்களும் வளர்த்துத் தமிழில் செழித்தோங்கியுள்ள சைவ இலக்கியத்தின் அடிப்படை, ஜனநாயகமும் சோஷலிஸமும் தழுவியதாகும். அக்கால சாதியடிப்படையிலான மானியமுறைச் சமுதாயத்திலே தனிமனிதன் திருவருளோடு சமத்துவமும் சுதந்திரமும் பெற்றுக் கொள்ள மெஞ்ஞான சோஷலிஸம் கண்ட சைவ இலக்கியம் உதவியது. ஆகவே புதிய அரசியல் திட்டம் ஜனநாயக சோஷலிஸ அடிப்படையில் அமைய விருப்பதனால் சைவ இலக்கியத்திற்கு மகத்தான எதிர்காலம் உண்டு. ஆகவே சோஷலிஸ அப்படையிலான சைவ இலக்கியம் வளரத் தமிழ் ஆலோசனைச்சபை உதவ வேண்டும்,

மேற்கண்டவாறு சைப்புலவர் வித்துவான் க. கணபதிப்பிள்ளை தமிழ் ஆலோசனைச் சபைக்கு அனுப்பியுள்ளவிரிவான மனுவில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவ்வேண்டுகோளில் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப்பின் வரும் ஆலோசனைகளும் தெரிவிக்கப்பட்டுள்ளன.

வியாபாரநோக்குடையார் தாம் விரும்பிய பத்திரிகைகளையே இறக்குமதி செய்து வாசகர்களிடையே திணிப்பது நிறுத்தப்பட வேண்டும். மேற்படி திணிப்பினால் அரிய தென்னிந்திய சைவ சமய வெளியீடுகளைப் பெற முடியாத சூழ்நிலை நீக்கப்பட வேண்டும்.

ஈழத்து இலக்கியம் அரசியல் திட்டத்திற்கு முரணான ஏகாதிபத்திய காலனித்துவக் கொள்கைகளை விடுவக் அரசியல் திட்டம் கூறும் அடிப்படை உரிமைகளைத் தழுவியதாக வளர

ஆவன செய்தல் வேண்டும்.

சிறுகதை முதலியவற்றால் சைவத்தமிழ்ப் பண்பாட்டுக்கு முரணான கருத்துக்கள் பரவ இடமளித்தலாகாது.

இலங்கையிலுள்ள ஒவ்வொரு சமய இலக்கியபரம் வளரவும் அதேவேளையில் அவை ஜனநாயகசோஷலிஸ வளர்ச்சிக்குஉதவவும் ஆவன செய்தல் வேண்டும். அதற்கேற்பப் புதிய இலக்கிய பரம்பரை தோன்றவேண்டும்.

இலங்கையில் சிறந்தவார சஞ்சிகைகள் தோன்றப் பெரிய பத்திரிகைநிறுவனங்களையும் ஊக்கப்படுத்த வேண்டும்

இலங்கையில் வெளிவரும் பண்டிதமணி நூல்கள் யாழ்ப்பாணம் கூட்டுறவுத் தமிழ் வெளியீட்டக நூல்கள், நம். எழுத்தாளர் நூல்கள் தரத்திலே தென்னிந்திய நூல்களுக்குக் குறைந்தவையல்ல! நம்நாட்டு நூல்கள்இந்தியா செல்ல அவ்வரசாங்கம் விதித்துள்ள மறைமுகத்தடைகளை நீக்க தமிழ் ஆலோசனைச் சபை உதவவேண்டும்.

— —

## வி. வி. கிரி ரஷ்யா பயணம்

புதுடில்லி, செப் 22

இந்திய ராஷ்டிரபதி திரு. வி. வி. கிரி தமது பாரியாருடன் இன்று புதுடில்லியிலிருந்து தாஷ்கண்ட் பயணமானார். இவர் இங்கு 10 நாள் தங்கிசோவியத்ரஷ்யா ஹங்கேரியா முதலிய இடங்களுக்கு சுற்றுப்பிரயாணம் செய்வார்.

இவருடைய பயணம் பாரதத்திற்கும் சோவியத் யூனியனுக்குமுள்ள நல்லெண்ணத்தையும் நட்புறவையும் ஐக்கியப்படுத்தும் என வழியனுப்பிவைத்த பிரதமர் திருமதி இந்திரா காந்தி பேசுகையில் குறிப்பிட்டார்.

பெருந்த... மையாக வேலை முடிந்ததும் ஊழியர்களை அவரவர் வீடுகளுக்கு அனுப்ப உத்தரவு வழங்குமாறும் கோரி, ஆனையிறவு உப்புக் கூட்டுத்தாபன உற்பத்தி விஸ்தரிப்புப் பகுதி ஊழியர்கள் ... ஸ்தாபன அதிபருக்கும் சம்பந்தப்பட்ட அமைச்சருக்கும் மகஜர் அனுப்பிவைத்துள்ளனர்.

நாளாந்தம் பெண்கள் உட்பட சகல ஊழியர்களுக்கும் கொடுக்கப்படும் கணக்கு வேலைகளான பாத்தி வழித்தல், பலகை அடித்தல், கியூப் வெட்டல், உப்பு அள்ளல் பாரமேற்றல் ஆகியன போன்ற வேலைகளைச் செய்யும் ஊழியர்கள் வேலைகளை முடித்துவிட்டு நேரத்திற்கு அவரவர் இருப்பிடத்திற்கு செல்ல அனுமதிக்கப்படவில்லையாம். மேற்படி கணக்கு வேலைகளை ஊழியர்கள் காலை 10 மணிக்கு செய்து முடித்தாலும்பகல் ஒருமணிக்குத்தான் இருப்பிடங்களுக்குச் செல்ல அனுமதிக்கப்படுகிறார்களாம்.

— —

## வரவேற்பு

பருத்தித்துறை, செவ்

நெல்லியடிப் பட்டின சபைத் தலைவர் திரு. எஸ். பீ தேவசகாயத்திற்கும் மற்றும் உறுப்பினருக்கும் இம்மாதம் 28-ம் திகதி மாலை வதிரி புனித அந்தோனியார் ஆலய முன்றலில் பொதுவரவேற்பு அளிக்கப்படவிருக்கிறது.

......

## விஞ்ஞான பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு

கோட்டை, செவ்

டாக்டர்கள் பொறியியலாளர்கள் மற்றும் விஞ்ஞானக் கல்வி கற்றவர்கள் யாவருக்கும் ஊக்கமளிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்நாட்டின் அறிவுத்திறன் இங்கேயே பயன் பெறவும் வெளிநாட்டுக்குச் செல்லாதிருக்கவுமே அரசாங்கம் மேற்படி நடவடிக்கையை எடுக்கவிருக்கிறது.

உள்ளூரிலேயே இவர்கள் வேலைவாய்ப்புப் பெறத்தக்க சகல வசதிகளையும் அரசாங்கம் செய்து கொடுக்கவிருக்கிறது. தேசிய அபிவிருத்தியின் பொருட்டு இந்த அறிவுத்திறன் நாட்டுக்கு அத்தியாவசியமானது என்பதை அரசாங்கம் உணர்ந்துள்ளது.

பிரதமர் திருமதி பண்டாரநாயக்கா நாட்டின்விஞ்ஞான அறிவுத் திறனை உள்நாட்டில் பயன்படுத்துவதற்கான திட்டமொன்றை வகுக்கும்படி உத்தரவிட்டுள்ளார் எனத் தெரியவருகிறது.

இதற்கான நடவடிக்கைகளில் துரிதமாக ஈடுபட்டுள்ளது.


... ஆலோசனைகளில் ஈடுபட்டுள்ளார்கள்.

1957 ல் கேரள மாநிலம் அமைக்கப்பட்ட பின்னர்

நாடு முதலமைச்சர் திரு. கருணாநிதி பின்வருமாறு கூறியிருக்கிறார்.

‘ஒருகாலத்தில் அங்கு


சக்தி வாய்ந்த
சர்வ பூச்சி நாசினி
பொலிடோல் E-605



எல்லாக் கிருமிப் பீடைகளையும் இல்லாதொழித்து, பயிர்கள் செழிக்கவும் விளைச்சல் பெருகவும் செய்வது பொலிடோல்.


அழுக்கணவன், ஓட்டுண்ணி, பயிர்ப்பேன், பனிப்பூச்சி, இலையரிப் புழு போன்றவற்றை அது அடியோடு தொலைத்துவிடும்.

நெல், புகையிலை, உருளைக்கிழங்கு, மிளகாய், வெங்காயம், காய்கறி முதலிய எவ்வித பயிர்ச் செய்கையையும் பாதிக்கும் எல்லாவித பூச்சி, புழுக்கள், கிருமிகளையும் அழிக்கும் சக்தி வாய்ந்தது— பொலிடோல்.

100 சி. சி. (4 அவுன்ஸ்) விலை— ரூ. 5/50
250 சி. சி. (9 அவுன்ஸ்) விலை— ரூ. 11/-
1000 சி. சி. (35 அவுன்ஸ்) விலை— ரூ. 37/-

பொலிடோல் ஒரு பேயர் தயாரிப்பு. நம்பிக்கையான விஷயமறிந்த விநியோகஸ்தரிடம் கிடைக்கும். இலவச அறிவுரைச் சேவைக்கு எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

பயிர்களைக் காத்துப் பண லாபம் பெறப் பாவியுங்கள்—
பேயர் விவசாய ரசாயனப் பொருள்கள்.



மூலப் பொருட் சத்து உற்பத்தியாளர்:
பேயர், ஜெர்மனி

BAYER

இலங்கையில் தயாரிப்போர்:
ஹேக்கெம் லிமிட்டெட்
400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10.


தெரிவித்துள்ளார்.

......

## தந்திக்கம்பி களவு

பூநகரி, செவ்வாய்

பூநகரி கிளிநொச்சி வீதியில் தம்பிராய் என்னுமிடத்தில் தந்திக் கம்பிகள் நேற்று முன்தினம் இரவு களவாடப்பட்டுவிட்டன. இதனால் பூநகரி தந்திச் சேவை இரண்டுநாள் தடைப்பட்டது.

2500 அடிக்கு மேற்பட்ட தந்திக்கம்பி களவாடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இது சம்பந்தமாக பூநகரி காரியாதிகாரி சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டுள்ளார்.

......

## ரஷ்யா செல்கிறார்

கோட்டை, செவ்.

ரஷ்யாவின் அழைப்பை ஏற்று மீன்பிடித்துறை மந்திரி திரு. ஜோர்ஜ் ராஜபக்ஷ மீன்பிடித்தொழில் வளர்ச்சியடைந்துள்ள பகுதிகளைப் பார்வையிட ரஷ்யா செல்லவிருக்கிறார்.

ரஷ்யா இலங்கைக்கு மீன் பிடிக்கப்பல்கள், இயந்திரங்கள், பிறகருவிகள் ஆகியனவற்றை நன்கொடையாக வழங்கியுள்ளது.

......

## வணிகப் பிரிவில் 13 பேர் சித்தி

யாழ்ப்பாணம், செவ்.

கொக்குவில் இந்துக்கல்லூரியிலிருந்து 1970 ஏப்பிரலில் நடைபெற்ற க. பொ. த. (உயர்தர) பரீட்சையில் தோற்றிய 14 வணிகப் பிரிவு மாணவர்களில் 13 பேர் சித்தி பெற்றுள்ளனர். ஒருவர் மிக விசேட சித்தியும், நால்வர் விசேட சித்தியும் எண்மர் சித்தியுமடைந்துள்ளனர்.

......

## கிளிநொச்சி எம். பி. க்கு அன்பளிப்பு

பூநகரி, செவ்வாய்

கிளிநொச்சி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வீ. ஆனந்தசங்கரிக்கு மோட்டார் வாகனமொன்றை அன்பளிப்புச்செய்வதற்கான முயற்சியில் இப்பகுதி மக்கள் ஈடுபட்டுள்ளனர். இதற்கான ஓர் ஆலோசனைக் கூட்டம் கிளிநொச்சித் தொகுதி த. கா. வாலிப முன்னணித் தலைவர் திரு. இ. கிருஷ்ணராசா தலைமையில் நடைபெற்றபோது இந்த முடிவு எடுக்கப்பட்டது கிளிநொச்சி தொகுதி வாலிப முன்னணி மாநாட்டை இவ்வாண்டு நடத்துவதுபற்றியும் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

சமத்துவமின்மையும், உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற எண்ணமும் ஒரு தீமையாகும் ஆனால் துப்பாக்கி முனையில் உள்ளத்திலிருந்து தீமையை அகற்ற முடியும் என்று நான் கருதவில்லை. மனித உள்ளம் இந்த வழிமுறைக்கு அடிபணியாது.
—மகாத்மா காந்தி

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna: Telephone: 889.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் புரட்டாசி மாதம் 7-ந் திகதி (23-9-70)

## சிறந்த சில யோசனைகள்

நேற்று முன்தினம் நடைபெற்ற யாழ்ப்பாண இந்துக் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசிய செனட்டர் எஸ் நடேசன் சில சிறந்த யோசனைகளைத் தெரிவித்திருந்தார் பொதுவாக நாட்டுமக்கள் அனைவரும் குறிப்பாகத் தமிழ் மக்களும் இந்த யோசனைகளை ஆழ்ந்து சிந்தித்துச் செயற்படுத்தினால் எதிர் காலத்தைப் பற்றி அதிகம் அஞ்சவேண்டிய அவசியம் இருக்காது.

(1) தேசிய ஒற்றுமையை வளர்ப்பதில் பாடசாலைகள் முக்கிய பங்கு வகிக்கவேண்டுமென்பதும் பாடத்திட்டத்தையே மாற்றியமைக்க வேண்டுமென்பதும் அவர் தெரிவித்த முதல் யோசனை

தேசிய ஒற்றுமை பற்றி அமைச்சர் முதல் ஆட்சிமன்றப்பிரதிநிதிகளுட்பட பலரும் பேசிவருகின்றனர். தேசிய ஒற்றுமையைத் தாங்கள் தான் நிலை நாட்டியதாக முன்னைய அரசாங்கம் பெருமைப்பட்டுக்கொண்டது. எங்களால்தான் உண்மையான தேசிய ஐக்கியத்தை நிலைநாட்ட முடியுமென்று இன்றைய ஆட்சியாளர் கூறிவருகின்றனர் ஆனாலும் தேசிய ஒற்றுமை இன்னமும் பேச்சளவில் தானிருக்கிறதேயொழிய நடைமுறையில் அல்ல.

நமது பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் பிள்ளைகளுக்குப் படிப்பிக்கப்படும் சரித்திரப்பாடங்களில் சிங்கள மன்னர்களும் தமிழ் மன்னர்களும் போர்புரிந்தது பற்றியும் எந்த இடத்தில் எந்த வருடத்தில் சிங்கள மன்னன் தமிழ் மன்னனைத் தோற்கடித்தான் என்பது பற்றியும்தான் போதிக்கப்படுகின்றன. இதுபோன்ற பாட [illegible] சிறுபிராயத்திலேயே தேசிய ஒற்றுமையை ஊட்டாமல் பகைமையையும் வேற்றுமையையும் ஊட்டினால் வளர்ந்த பின்னர் அதை மாற்றுவது சுலபமல்ல

எனவே பாடநூல் சம்பந்தமாக செனட்டர் நடேசன் தெரிவித்த யோசனை கல்வி அமைச்சின் கவனத்தை ஈர்க்கவேண்டும்

(2) சமூகக் கேடுகள் பலவற்றுக்கும் வறுமைதான் காரணம் என்றும் வறுமையை ஒழித்துக்கட்டுவதற்கு இன, மத, மொழி வேறுபாடுகளை மறந்து அனைவரும் ஒன்று சேர்ந்து போராடவேண்டுமென்றும் இல்லையேல் இந்த நாட்டையே வறுமை அழித்துவிடுமென்றும் கூறுகிறார் செனட்டர் நடேசன்

பொருளாதாரப் பிரச்னைதான் இந்த நாட்டின் சகல பிரச்னைகளுக்கும் காரணம் என்றும் இப்பிரச்னைக்குத் தீர்வுகண்டுவிட்டால் இனப் பிரச்னையோ மொழிப் பிரச்னையோ இருக்கமாட்டாதென்று பலரும் கூறுகின்றனர். ஆனால் பொருளாதாரப் பிரச்னையைத் தீர்ப்பதற்கும் வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்குவதற்கும் தேசிய அடிப்படையில் திட்டம் வகுக்கப்படவுமில்லை; நடவடிக்கை மேற்கொள்ளப் படவுமில்லை. இதற்கு மாறாக இன மொழி அடிப்படையில் தான் சகல பிரச்னைகளும் அணுகப்படுகின்றன, வறுமை மக்கள் அனைவருக்கும் பொது எதிரி இதனை சகலரும் ஒன்று சேர்ந்துதான் எதிர்த்துப் போராடி வெற்றி கொள்ள முடியும்

நாட்டிலுள்ள மூலவளங்களையும் மக்களின் உழைப்புச் சக்தியையும் சரியான முறையில் உபயோகிக்க பொதுத் திட்டமொன்றை வகுத்து அதைச் செயற்படுத்த [illegible]

சமூக, பொருளாதார அபிவிருத்திச் சங்கம்:

# வெளிநாட்டுத் தமிழர் பண உதவி அளிக்க முன்வந்துள்ளனராம்

யாழ்ப்பாணம், புதன்

**வடமாகாண சமூக பொருளாதார அபிவிருத்தி சங்கம் ஒன்றை நிறுவ முடிவு செய்துள்ளோம், இச்சங்கத்திற்கு வடமாகாண அபிவிருத்தியில் அக்கறை கொண்ட ஒவ்வொருவரும் தங்கள் வருமானத்தில் 5 வீதத்தை கொடுக்க வேண்டும் வடபகுதியில் புதிதாக கைத்தொழில் ஆரம்பிக்க விரும்பும் வாலிபர்கள் இச்சங்கத்தில் கடனுதவி பெறலாம் மலேயா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் வாழும் யாழ்ப்பாணத் தமிழர்கள் பலர்இச்சங்கத்திற்கு பணவுதவி அளிக்க முன்வந்துள்ளனர்.**

யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் இரண்டாவது தினமாக நேற்று நடந்த சோஷலிச மகாநாட்டில் வட்டுக்கோட்டை எம். பி. திரு ஏ. தியாகராசா மேற்கண்ட தகவலை தெரிவித்தார்.

திரு. தியாகராசா மேலும் கூறியதாவது.

கடந்த 15 ஆண்டுகளாக தமிழ் மக்கள் திட்டமில்லாத மொழிப் போராட்டத்தில் தங்கள் காலத்தை வீணாக்கிவிட்டார்கள் பொருளாதாரத்தை பற்றி அவர்கள் சிறிதளவேனும் சிந்திக்கவில்லை இனிமேல் பொருளாதார போராட்டத்தை தமிழ் மக்கள் திட்டமிட்டு ஆரம்பிக்க வேண்டும். இந்தப் பொருளாதார போராட்டத்தில் வடமாகாணத்தின் அபிவிருத்தியில் அக்கறையுடையவர்கள் கலந்து கொள்ள வேண்டும்.

வடமாகாணத்தின் வருங்கால ஜனத்தொகைக்கும், விவசாய, கைத்தொழில் அபிவிருத்திக்கும் முக்கியமாக தேவைப்படுவது தண்ணீர் மகாவலி கங்கை வடக்கே வந்து சேர கால தாமதமாகும். அணுசக்தி நிலையம் ஒன்றை நிறுவி யந்திரத்தின் உதவி மூலம் நமக்கு வேண்டிய தண்ணீரைப் பெறமுடியும்நிலத்தின் அடிமட்டத்திலிருந்துகுழாய்கள் மூலம் தண்ணீரை எடுப்பது மற்றொரு வழியாகும் ஆதலால் எந்த வழியிலென்றாலும் சரி, நாம் தண்ணீரை பெற முயற்சிக்கவேண்டும்.

அரசாங்கம் பல அபிவிருத்திகளை செய்து வருகிறது, ஆனால் அந்த அபிவிருத்திகள் போதாது, நமது வாலிபர்கள் எல்லோருக்கும், அரசாங்கத்தால் வேலைவழங்கமுடியாது. ஆதலால் நாம் வட பகுதியில் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டும் கடந்த 5 வருட காலத்தில் தென் பகுதியில் எத்தனையோ தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால் வடபகுதியில் ஒரு தொழிற்சாலையாவது ஆரம்பிக்கப்படவில்லை இங்கு பல செல்வந்தர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் தனித்தனியாகவோ, கூட்டாகவோ, பல தொழிற்சாலைகளை ஆரம்பித்தால், ஆயிரக்கணக்கான வாலிபர்களுக்கு வேலைவழங்கலாம்.

நாம் ஆரம்பித்துள்ள சங்கத்திற்கு வடமாகாணத்திலுள்ள ஒவ்வொருவரும், தங்கள் வருமானத்தில் 5 வீதத்தை கொடுக்கவேண்டும். இதில் இரண்டரை வீதம் வட்டியுடன் திருப்பிக் கொடுக்கப்படும். மற்ற இரண்டரை வீதம், வடபகுதி அபிவிருத்திக்கு செலவிடப்படும். இச்சங்கத்தில் 12 உப-கமிட்டிகள் நிறுவப்படும். இக்கமிட்டிகள் அரசாங்கத்துடனும், மந்திரிகளுடனும் தொடர்பு கொண்டு, வடபகுதி அபிவிருத்திக்காக பாடுபடும்.

வடமாகாண சமூகபொருளாதார அபிவிருத்திச்சங்க உறுப்பினர்களாக கீழ்காணுவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: திரு. ஏ. தியாகராசா பதில் தலைவர்கள்: திரு. சி அருளம்பலம், திரு. வி. ஆனந்தசங்கரி, உப தலைவர்கள்: திருவாளர்கள் எஸ். ஆர். கனகநாயகம், ஆர், என் சிவப்பிரகாசம், பி. நாகலிங்கம், வி. பொன்னம்பலம், என். துரைராஜா, ஏ. பிரான்சிஸ், முகாந்திரம் ஈ. பி இராசையா, ஜனாப் சஹீட், பொதுச் செயலாளர் திரு. ஏ. அழகசுந்தரம் தனாதிகாரி திரு. எஸ். தேவதாசன்.

இச்சங்கத்தின் கமிட்டி கூட்டத்தை இம்மாதம் 29ம் திகதி மலேயாகபே மேல் மாடியில் கூட்டுவதென தீர்மானிக்கப்பட்டது.

# அத்தியார் என்னும் அருந்தொண்டன்

முதலியார் முகாந்திரம் அத்தியார் அருணாசலம்ஜே.பி. அவர்களின் 9வதுசிராத்த தினம்நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

செப்டம்பர் மாதம் 22ம் நாள் நீர்வேலி மக்களின் ஓர் துயர நாள். காலத்திற்குக் காலம் உலகம் உய்யப் பெரியார்கள் தோன்றி மறைவது வழக்கம். அதேபோன்றுதோன்றி மறைந்தவர்களுள் ஒருவரே குறுகியகோற்ற [illegible]



த்தை ஆரம்பித்துப் பல்லாண்டுகள் தலைவராகவிருந்துபணிபுரிந்தார். நீர்வேலி கிராமச் சங்கத்தின் அங்கத்தவராகவும், தலைவராகவும் [illegible]

ஜி. சீ. ஈ.

## 19 வயது மாணவருக்கு தொழில் பயிற்சி

கோட்டை, செவ்வாய்

அடுத்த ஜனவரியிலிருந்து 19 வயதுக்குட்பட்ட ஜி சி. ஈ. மாணவர்களுக்கு கைப்பணி, கிளறிக்கல், விற்பனை ஆகிய துறைகளில் பயிற்சி அளிக்க கைத்தொழில், விஞ்ஞான, விவகார அமைச்சு திட்டம் அ[illegible]த்துள்ளது.

இத்திட்டதின் கீழ் 25 ஆயிரம் கிராம மக்களுக்கு கைத்தறி, சிறுகைத் தொழில் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது[illegible]த்துடன் நிர்வாக முன்[illegible]ற உற்பத்தி [illegible]

### திருமலை ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கை எடுக்கவேண்டும் இப்படியான செயல்கள், அரசாங்கத்தின் மீதுள்ள நல்லெண்ணத்தை பாதித்துவிடும்

### தனி இனம்

சிறுபான்மை தமிழரை தனிஇனமாக பிரகடனப்படுத்தும்படி கோருவது பெரும் ஆபத்தானதுக் கடந்த பலவருடங்களாக நாம் நடாத்திவரும் தீண்டாமை ஒழிப்பு போராட்டத்தை [illegible]

# உவர் நிலத்தில் நெல் விளைச்சல்

பெரும்பாலும் யாழ்ப்பாணக் குடாநாட்டிலும், கடற்கரையோரமாகவுள்ள மன்னார், முல்லைத்தீவு, திருக்கோணமலை, மட்டக்களப்பு பகுதிகளிலும், தீவுப்பகுதியைச் சுற்றியும் கடலுடன் தொடர்பான லட்சக்கணக்கான ஏக்கர் நிலம் உவர் நிலமாகக் கிடக்கிறது, நிரந்தரமான கடலேரிகள் நாட்டுக்குள் ஊடுருவியுள்ளன. இவற்றை அடுத்த நிலங்கள் உப்புத்தன்மை வாய்ந்தவை உவர் நிலங்களிலும் சிலர் நெல் செய்கிறார்கள். ஆனால் பெரும்பாலான நிலம் போதிய ஊக்கமும் கவனிப்புமின்றி தரிசாகவே கிடக்கிறது. வடமராட்சி கடலேரியில் மட்டும் 15,000 ஏக்கர் நிலம் இப்படிக் கிடக்கிறது.

கடல் நீர் தொடர்பால் மட்டுமன்றி, உப்பு அதிகமான நீரைப் பாசனத்துக்கு உபயோகிப்பதாலும், நிலத்திலுள்ள உப்புகள் நீருடன் கரைந்து மேலே வரசூரிய வெப்பத்தால் நீர் ஆவியாகிவிட உப்புகள் மேல் நிலத்தில் படிவதாலும், நிலங்கள் உவராகின்றன.

உள்நாட்டுப் புறங்களிலும் சில இடங்களில் உவர் காணப்படுகிறது நிலம் காடாயிருக்கும்போது மரங்களின் இலைகள் சருகுகள் மண்ணோடு கலந்து அதன் சேதனப் பொருள் அதிகரிக்கிறது. மரவேர்கள் மழை நீர் வடிந்தோடுவதற்கு உதவியாயிருக்கின்றன. காடுகள் அழிக்கப்பட்டதும் மண்ணில் சேதனப் பொருட்கள் குறைவதோடு, மழை நீர் வடிந்தோட வழியின்றி பள்ளங்களில் தங்கி நின்று ஆங்காங்குள்ள உப்புகளை கிரகித்துக் கொள்ளுகிறது.

ரசாயன உரம்.

சாதாரணமாகஉவர் நிலங்களை பயனற்றவை என்று தரிசாகவிடாமல் இருபோகமும் உழுது சாறிப் பயிர் செய்ய வேண்டும். இந்நிலங்களில் வீச்சு விதைப்புக்கு பதிலாக நாற்று நடுதல் முறை கூடுதான பயனை அளிக்கும்.

ரசாயனமுறையில் உப்புத் தன்மையை மாற்ற முடியாவிட்டால் சாதாரண கமக்காரர் பின் கண்ட நான்கு விஷயங்களை பின்பற்றுவது நலம், ஒன்று, கடல் நீர் புகாதவண்ணம் வரம்புகளை உயரமாகக் கட்டுதல், இரண்டு அடிக்கடி ஆழமாக உழுது சாறுவதால் மண்ணைத் தூர்வையாக்கி நிலத்தின் கீழேயுள்ள உப்புகள் மேலே வராமல் தடுத்தல். மூன்று, வெகு ஆழமாகபனை ஓலையை தாட்டு மண்வளத்தைத் பெருக்குவதுடன் உப்புகள் மேல்மட்டத்துக்கு வராமல் தடுத்தல், நாலு, ஐப்பசியில் நன்றாக மழை பெய்து நீர் வடிந்தோடிய பின் நாற்று நடுதல்.

உவர் லநித்துக்கு ஏற்ற நெல் இனங்களை தெரிவு செய்வதே புத்திசாலித்தனமாகும். நம்மவர்களில் பலர் வெள்ளை, வெள்ளை என்று அதோடு கட்டிக் கொண்டு அழுகிறார்களே ஒழிய நிலப்பண்புக் கேற்ற நெல்லை விதைப்பதில்லை,

உப்புத்தன்மையை எதிர்க்கும் சக்தியுள்ள பெரிய வெள்ளை, சவர்க்கூரன் உவர்க் கறுப்பன், உவர் வெள்ளை முதலிய நெல்லினங்கள் இலங்கையில் உண்டு. இவற்றில் பொருத்தமான ஏதாவதொரு இனத்தை பயிரிட்டு ஒரு முறைவெற்றி கண்டு விட்டால், பின்விதை [illegible]

## விவசாயப் புலம்

காலபோக வேளாண்மை ஆரம்பித்து விட்டபடியால் உவர் நிலங்களை எப்படி திருத்தலாம், என்ன பசளை உபயோகிக்கலாம், என்ன இன நெல்லை விதைக்கலாம் என்ற பிரச்னைகள் கமக்காரரை எதிர்நோக்கியுள்ளன.

உவர் நிலத்தில் கல்சியம், [illegible]

நெல் வாங்கவேண்டிய அவசியம் உண்டாகாது. மட்டக்களப்பு பட்டினத்துக் கண்மையிலுள்ள எருமைத் தீவைச் சுற்றி கடலேரி இருக்கிறது. சில நாட்களில் தீவு முழுவதும் உப்பு நீர் வெள்ளமாகத் தேங்கி நிற்கும். ஆனால் அங்கே உவர்க் கறுப்பன், கல்லுண்டை [illegible]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வருடத்தில் சிங்கள மன்னன் தமிழ் மன்னனைத் தோற்கடித்தான் என்பது பற்றியும்தான் போதிக்கப்படுகின்றன. இதுபோன்ற பாடபோதனை பிஞ்சு உள்ளங்களிலேயே இன வேற்றுமையையும் பகையையும் ஏற்படுத்தி பிளவையும் பிரிவினையையுமே வளர்க்க உதவுமேயன்றி தேசிய ஒற்றுமைக்கு வழிவகுக்காதென்பது செனட்டர் நடேசனின் கருத்து. இக்கருத்தைத் தவறென்று சொல்வதற்கு யாரும் துணியமாட்டார்கள்.

இனப்பகையை மட்டுமல்ல சாதிப்பாகுபாடுகளை வளர்க்கூடிய பாடங்களும் நமது பிள்ளைகளின் பாடநூல்களிலிருக்கின்றன. இன, மத, சாதி வேறுபாடுகளை விளக்கும் பாடங்கள் பாலர் வகுப்புகளிற் படிப்பிக்கப்படும் பாடப்புத்தகங்களில் இன்றுமிருக்கின்றன.

இன, மத, சாதிப் பாகுபாடுகளை வளர்க்கும் பாடநூல்களை அகற்றிவிட்டு உண்மையான தேசிய ஐக்கியத்தை தூய சமத்துவ சமுதாயத்தை உருவாக்கக்கூடிய பாடநூல்களை பாலர் வகுப்பிலிருந்து பல்கலைக்கழகம் வரை படிப்பிப்பதற்கு வழிவகுக்கவேண்டும். தேசிய ஐக்கியத்தை வளர்க்க உதவக்கூடிய உண்மை சரித்திர வரலாற்றுச் சம்பவங்கள் நிறையவுண்டு. ஒரு சிலர் என்ன காரணத்துக்காகவோ சரித்திரத்தைத் திரித்து எழுதத் தொடங்கியதும் நம்நாட்டுக்கேற்பட்ட தீமைகளுக்கு ஒரு காரணம் இந்த நிலை மாற்றப்படவேண்டும்.

கல்விமான்களையும் சிந்தனையாளர்களையும் கொண்ட பாடநூற்குழு வொன்றை அமைத்து இதற்கான முயற்சியை மேற்கொள்ள கல்வி அமைச்சரும் அரசாங்கமும் முன்வரவேண்டும்.

ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?' என்பது தமிழிலுள்ள ஒருபழமொழி.

களையும் மக்களின் உழைப்புச் சக்தியையும் சரியான முறையில் உபயோகிக்க பொதுத் திட்டமொன்றை வகுத்து அதைச் செயற்படுத்த அரசாங்கம் முன்வருவது வரவேற்கத் தக்கது. மக்களின் ஒத்துழைப்பும் நிச்சயம் கிடைக்கும்.

3. தமிழ்மக்கள் தங்கள் சொந்த உழைப்பில் நம்பிக்கை வைக்கவேண்டுமென்பதும் தங்களுக்குள் ஒற்றுமையை ஏற்படுத்தி ஆடம்பரச் செலவுகளை விடுத்து சிக்கனமாக வாழ்க்கையை நடத்த முன்வரவேண்டுமென்பதும் செனட்டர் நடேசன் தெரிவித்த குறிப்பாக தமிழ் மக்களுக்குத் தெரிவித்த யோசனையாகும்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் கடந்தகால அனுபவங்களிலிருந்தும் இப்போதுள்ள நிலைமைகளிலுருந்தும் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்க முடியாதவர்களல்லர். எந்த அரசாங்கம் வந்தாலும் எந்தக் கட்சியின் பிரதிநிதிகளை இங்கிருந்து அனுப்பினாலும் முன்னர் போல் அரசாங்க உத்தியோகத்தை நம்பிவாழ முடியாதென்பதுதெளிவு. வாய்ப்பும் வசதியுமுள்ளவர்களும், கூட்டுறவு முறையிலும் தமிழ்ப் பகுதிகளிலுள்ள மூலவளங்களைப் பயன்படுத்திப் புதிய புதிய கைத்தொழில்களையும் சிறு தொழில்களையும் ஆரம்பித்து சொந்தப் பலத்தில் நிற்க முன்வரவேண்டும். இதே சமயம் திருமணம் திருவிழாக்கள் போன்றவற்றில் போட்டிமனப்பான்மையுடன் ஆடம்பரமாகச் செலவு செய்வதை விடுத்து அந்தப்பணத்தை தொழில் துறையில் முடக்குவதே சிறப்பு.

## 42 கோடி ரூபா லாபம்

கோட்டை, செவ்வாய்

1968—69-ம்ஆண்டுகளில் சாராயம், கள்ளு ஆகியவற்றுல் கலால் இலாகாவுக்கு 20 கோடி ரூபாகிடைத்துள்ளது. இதேபோன்று சிகரெட்டாலும் 22 கோடி ரூபா கிடைத்துள்ளது.

கலால் கமிஷனரின்சமீபத்திய நிர்வாக அறிக்கையிலிருந்து இது தெரியவந்துள்ளது. இது இந்நாட்டு மக்கள் முன்னரிலும் பார்க்க மேற்படி பொருட்களுக்குப் பெருந்தொகையான பணத்தைச் செலவுசெய்கிருர்கள் என்பதைக் காட்டுகிறது.

## வறுமை...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

உழைப்பையும் நம்பியிருக்க வேண்டும்.

தேவாரத்துடன் ஆரம்பமான இவ்வைபவம் பழைய மாணவர் சங்கச் செயலாளர் திரு. டபிள்யூ. எஸ். செந்தில்நாதனும், சிரேஷ்ட மாணவ தலைவர் செல்வன் கே.விஷ்ணுமோகனும் நன்றிகூற கல்லூரிக் கீதத்துடன் நிறைவேறியது.

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

காலம் உலகம் உய்யப் பெரியார்கள் தோன்றி மறைவது வழக்கம். அதேபோன்றுதோன்றி மறைந்தவர்களுள் ஒருவரே குறுகியதோற்றமும், குறிநீறும், துண்டு வேட்டியும், தலைப்பாகையும் கொண்ட முதலியார் முகாந்திரம் அத்தியார் அருணாசலம் சமாதான நீதிபதி அவர்கள்.



'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்ற வாய்மொழிக்கிணங்க 27-8-1887ல் தோன்றினார் 'விளையும் பயிரை முளையில் தெரியும்' என்பதற்கிணங்க சிறுவயதிலேயே இவரிடமிருந்த கல்விவேட்கையும் கடவுட்பற்றும் இவரின்வாழ்க்கையைச் சித்தரித்துக் காட்டின. கொழும்பு கொம்மேர்சல் கொம்பனியில் தொழில் புரிந்த இவர் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, முயற்சி என்பவற்றைக் கடைப்பிடித்தமையால் காலத்துக்குக் காலம் பதவி உயர்சிகள் பெற்றார். அக்காலத்தில் தாம் கல்விபயின்ற 'சிவசங்கர பண்டிதர் திண்ணைப் பள்ளிக் கூடம்' கடனில் மூழ்கியிருப்பதை உணர்ந்து அக்கடன் முழுவதையும் தாமே கட்டிமுடித்தது மட்டுமன்றி உயர்ந்த மாடமாளிகையோடு கூடிய ஒப்பற்ற கட்டிடங்கள் அமைத்து விஞ்ஞான கூடங்கள் சமைத்து பாலர் வகுப்புமுதல் பல்கலைக் கழகப் புகுமுக வகுப்பு வரை தம்மூர்சிறார்களும், அயலூர்சிறார்களும் கல்வி பயில வழி வகுத்தார்.

அத்தியார் கிராமப்பணி புரிய விரும்பி நீர்வேலி கிராமமுன்னேற்றச் சங்க பல ஆண்டுகள்பணி புரிந்தார்.

அத்தியார் அவர்கள் ஆண்டவனைத் தியானிக்கவும் தவறவில்லை, கொழும்பில் உத்தியோகம்பார்க்கும் போது கொழும்பு செட்டித் தெருவில் கந்தபுராணபடனமும் பஜனை வழிபாடும்; நீர்வேலியில் முப்பெருங்கோவில்களிலும் பஜனை வழிபாடும், பண்பான சமயப் பிரசங்கங்களும் செய்தார். மாணவரிடையே சமயம் வளரக் குருபூசைகள், பேச்சுப்போட்டிகள் நடாத்தினர் அமரத்துவமடையச்சிலமணிநேரங்களுக்குமுன்கூட சமயப் போட்டிகளுக்கான பரிசில்கள் வழங்கினார்.

உடல்பொருள்ஆவி அற்ர்ப்பணித்த தொண்டனின் உடல் மறைந்து விட்டது. அவரின் உயர் தொண்டுகள் இன்றும் அனைவரையும்அனுதாபிக்கச் செய்கின்றன.

த. பரராசசிங்கம்

## தமிழுக்கும்:...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

தேசிய ஐக்கியத்தை வளர்ப்பதற்காக ஒன்றுசேரவில்லை முதலாளித்துவத்தை காக்க வேண்டும என்ற ஒரே ஒரு நோக்கத்துடன் தான் அவை இரகசிய ஒப்பந்தம் மூலம் அரசாங்கத்தை அமைத்தன சிங்களமக்களுடன் தமிழ்மக்கள் இணைவதன் மூலமே உரிமைகளைப்பெறலாம் என்பதை இச்சந்தர்ப்பத்தில் உங்களுக்குச்சொல்லிவைக்க விரும்புகிறேன். இன்றைய நிலையில் தமிழினம் சிங்கள மக்களுடன் இணைந்து செயலாற்றவேண்டியது அவசியம்.

தெல்லிப்பழை கிராம சபைத் தலைவர் திரு. எஸ். சிதம்பரநாதன், கே. கணபதிப்பிள்ளை, எம் சி சுப்பிரமணியம், தொழிற் கமிஷனர் எஸ் சச்சிதானந்தம், திரு. வி. பொன்னம்பலம் உட்பட பலர் உரையாற்றினர்.

## தொழிலாள ...

(1-ம்பக்கத்தொடர்ச்சி)

திரு. வி பொன்னம்பலம் பேசுகையில் கூறியதாவது:-

இந்தியப் பிரதமர்திருமதி இந்திராகாந்தி அவரது தந்தை நேரு செய்யமுடியாமலிருந்த அரும் பெரும் சாதனைகளைச் செய்வதினால் தான் இன்று இந்தியா முன்னேறக் கூடியதாயுள்ளது. இந்திராகாந்தி வங்கிகளை தேசியமயமாக்கியும் அரசர்களுக்கு வழங்கும் திறையை நிறுத்தியும் நாட்டை முன்னேற்றிக்கொண்டு போவது போல் எமது நாட்டிலுள்ள தூரசர் இல்லங்களையும், அந்நிய வர்த்தகத்தையும் அரசு உடமையாக்குவதன் மூலம் இன்றைய பிரச்னைகளுக்கு ஒரளவு தீர்வு காணலாம்.

திரு எஸ் விஜயானந்தன் பேசுகையில். இன்றைய அரசு சோஷலிச அரசுஅல்ல சோஷலிசத்தை நோக்கிச் செல்லும் அரசு. ஆகவே சோஷலிச பொதுவுடமை அரசு அமைக்க சகல மக்களும் ஆதரவு அளிக்கவேண்டும். இன்று தமிழ் மக்களை வழிநடத்துவதாக கூறும் இரு தமிழ் கட்சிகளும் பிழையான வழியில் செல்கின்றன. ஆகவே தேசிய ஐக்கியத்தை வலுப்படுத்த எம்முடன் சேர்ந்து உழையுங்கள் என்றார்.

ஆயிரம் கிராம மக்களுக்கு கைத்தறி, சிறுகைத் தொழில் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. [illegible]த்துடன் நிர்வாக முன்னேற்ற உற்பத்தி நிலையம் வேலையற்ற சுமார் 500 பட்டதாரிகளுக்கு நிர்வாக வர்த்த சம்பந்தமான தொழில் முறையில் பயிற்சி அளிக்கவும்முன்வந்துள்ளது.

## பாரதி விழா

யாழ்ப்பாணம், புதன்

நல்லை பாரதிமன்றம் இம் மாதம் 29 30-ம் திகதிகளில் பாரதிவிழாக் கொண்டாடவிருக்கிறது.

ஊர்காவற்றுறைத் தொகுதி எம். பி. திரு கா. பொ இரத்தினம் வட்டுக்கோட்டை எம். பி. திரு ஆ. தியாகராசா திரு வ. பொன்னம்பலம் கவிஞர் வி. கந்தவனம் பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி செல்வி புஷ்பா செல்வநாயகம் திரு. சு. இராஜநாயகன் ஆகியோர் உரையாற்றுவர்.

## தமிழரசு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி

சார் துப்பாக்கிப்பிரயோகம் செய்து 2 தொழிலாளரை சுட்டுக்கொன்றதை கண்டிப்பதுடன் இந்த நிகழ்ச்சியை விசாரிக்க ஓர் விசாரணைக் குழுவை நியமிக்கவேண்டுமெனவும், இறந்தவர்களுடைய குடும்பங்களுக்கு நஷ்டஈடு கொடுக்கவேண்டுமென்றும்இச்செயற்குழு அரசாங்கத்தைக்கேட்டுக்கொள்கிறது.

தமிழ்மொழி விசேட ஏற்பாடுகள் சட்டம் முழுமையாகவும், நேர்மையாகவும் நடைமுறைப் படுத்தப்படும் என்று அரியணை உரையில் கூறிவிட்டு நடைமுறையில் தமிழ்மொழியை ஒழித்துக் கட்டி. சிங்களத்தை திணிக்கும் செயல்களிலும் தமிழ் மக்களுக்கு கடிதம் முதலியவற்றை தனிச்சிங்களத்தில் மட்டுமே அனுப்பி தமிழ் மக்களை சிறுமைப்படுத்தி அவர்களின் உள்ளங்களை புண்படுத்துவதிலும்அரசாங்கம் தீவிரமாக ஈடுபட்டு வருவதை இச்செயற்குழு கண்டித்து தமிழ் மக்களின் பிறப்புரிமையான மொழி உரிமைகளை தமிழ்மக்களுக்கு கொடுப்பதற்கு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டுமென அரசாங்கத்தை கேட்டுக்கொள்கின்றது.

சிறுபான்மை தமிழரை தனிஇனமாக பிரகடனப் படுத்தும்படி கோருவது பெரும் ஆபத்தானதுக் கடந்த பலவருடங்களாக நாம் நடாத்திவரும் தீண்டாமை ஒழிப்பு போராட்டத்தை இத்திட்டம் முறியடித்து விடும் பின்னர் மேலும் பல பிரச்னைகள் தோன்றக்கூடும் சிறுபான்மை தமிழரை தனி இனமாக பிரகடனப் படுத்தினால் தமிழினம் மேலும் பலமிழந்துவிடும்.

## இடமாற்றம்

திருகோணமலை பஸ் டிப்போவில் முதலில் 23 தமிழ் ஊழியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டனர். நான் போக்குவரத்து மந்திரியை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியபின்இந்த இடமாற்றங்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன தற்பொழுது மீண்டும் 13 பஸ் ஊழியர்களுக்கு இடமாற்ற உத்தரவுகிடைத்துள்ளது. இவர்களில் 8 பேர் தமிழர் 5 பேர் சிங்களவர் இதுசம்பந்தமாக நான் மந்திரியை சந்தித்த போது இதுவழக்கமாக நடக்கும் இடமாற்றம் என்றும் இது வகுப்புவாத அடிப்படையில் நடைபெறவில்லையென்றும் இதில் தலையிடமுடியாதென்றும் மந்திரி கூறிவிட்டார்,

இடமாற்றம் செய்யப்பட்டிருக்கும் 8 தமிழரும் பஸ் தொழிலாளர் கழகத்தை சேர்ந்தவர்கள் இவர்களில் இருவர் கமிட்டி உறுப்பினர்களாக இருக்கின்றன. மற்றும் 5 சிங்கள ஊழியர்களில்ஒருவர்தமிழ்பெண்ணை மணந்தவர் நால்வரும் தங்கள் சொந்த ஊருக்கு இடமாற்றம் செய்யும்படி கோரவில்லை வகுப்புவாத பின்னணியில் இந்த இடமாற்றம் நடைபெறவில்லையென்பதை காட்டுவதற்காகவே சிங்களவரையும் சேர்த்து இடமாற்றம் செய்திருக்கிறார்கள் அமைச்சர் சமசமாஜகட்சியை சேர்ந்தவராக இருந்துகொண்டேஇப்படி நடந்துகொள்வது முறையானதல்ல,

தமிழ் பிள்ளைகள் சிங்களம் படிக்க ஆரம்பித்தால், இன்னும், 10 வருடத்திற்குள் தமிழ் பிரதேசங்கள் சிங்களமய மாகிவிடும் இதனாலேயே, பாடசாலைகளில் சிங்களம் போதிக்கப்படுவதை நாங்கள் எதிர்க்கிறோம். தமிழர்கள் சிங்களம் படிக்க ஆரம்பித்ததும், வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள அரசாங்க இலாகாக்களில் சிங்களம் தெரிந்த ஊழியர்கள் நியமிக்கப்படுவார்கள், தமிழ்ப்பகுதியில் உள்ள தபால்நிலையங்கள் எல்லாம் சிங்களமயமாகிவிடும் சிங்களம் தெரிந்த தமிழர்கள் இப்பகுதியிலுள்ள கந்தோர்களில் நியமிக்கப்படுவார்கள் படிப்படியாக மாற்றம் ஏற்பட்டு சிறிதுகாலத்தின் பின் இப்பகுதிகளில் சிங்களவர்களே நியமிக்கப்படுவார் இதன் பின் இப்பகுதியில் வாழும்தமிழ் மக்கள் கிராம சேவகருடனோ காரியாதிகாரியுடனோ தபால் அதிபருடனோ சிங்களத்திலேயே தொடர்பு கொள்ள வேண்டிய நிலைமை ஏற்படும் நாளடைவில் தமிழர் எல்லாம் சிங்களவராக மாறும் நிலை ஏற்பட்டுவிடும் அதனால்தான்பாடசாலைகளில் சிங்களம்போதிப்பதை எதிர்க்கிறோம்.

திருத்தலாம், என்ன பசளை உபயோகிக்கலாம், என்ன இன நெல்லை விதைக்கலாம் என்ற பிரச்னைகள் கமக்காரரை எதிர்நோக்கியுள்ளன.

உவர் நிலத்தில் கல்சியம், சோடியம், மக்னீசியம் இவற்றின் குளோரைட், சல்பேற் உப்புகளே மலிந்து கிடக்கின்றன. வயல்களில் தண்ணீரை நிறையப் பாய்ச்சி, உப்புகள் அதில் கரைந்தவுடன் வடிகால் மூலம் தண்ணீரை அகற்றுவது உவரை மாற்றும் ஒரு மார்க்கம் இது அடிக்கடி உவர்த்தன்மை மாறும் வரை செய்யப்படவேண்டும். இப்படிச் செய்யும்போது மற்ற உப்புக்கள் கரைந்துபோக சோடியச் சத்து மிகுதியாக இருக்கவும் கூடும். இதற்கு மாற்று மருந்து கல்சியம் சல்பேற் என்ற மையிலுள்ள எருமைதீவைச் சுற்றி கடலேரி இருக்கிறது. சில நாட்களில் தீவு முழுவதும் உப்பு நீர் வெள்ளமாகத் தேங்கி நிற்கும். ஆனால் அங்கே உவர்க்கறுப்பன், கல்லுண்டை முதலிய நெல்லினங்களை உபயோகித்து நல்ல சாகுபடி பெறுகிறார்கள்.

நிலத்திலுள்ள உப்புத்தன்மையை அகற்ற சிறந்த மருந்து 'கிப்ஸம்' என்று சொல்லப்படும் கல்சியம் சல்பேற் இத்துடன் நிலத்தை தொடர்ந்து உழுது சாகுபடி செய்வதாலும், பனை ஓலை, புளியஞ்சருகு முதலியவற்றை ஆழமாக புதைப்பதாலும் உவர்த்தன்மையை அடியோடு நீக்கிவிடலாம்.

கலப்பை.

# களவாடிய கார் விபத்துக்குள்ளானது

கொழும் செவ்.

அமைச்சர் ஒருவரின் அந்தரங்கக் காரியதரிசிக்குச் சொந்தமான கார் ஒன்றுசமீபத்தில் நள்ளிரவில் களவாடப்பட்டுள்ளது.

தெமட்டக் கொடையில் உள்ள காரியதரிசியின் வீட்டில் இருந்து களவாடப்பட்டகார் அதேஇரவு விபத்துக்குள்ளாக்கப் பட்ட நிலையில் வத்தளையில் கண்டு பிடிக்கப்பட்டது.

15000ரூபா பெறுமதியான இக்கார் முற்றாகச் சேதமடைந்துள்ளதாக தெமட்டைக் கொடைப் பொலிசார் தெரிவித்தனர் இது சம்பந்தமாக கார்ச் சொந்தக்காரரான திரு ஏ எம் வ்பறுக் செய்து கொண்ட புகாரைத் தொடர்ந்து சந்தேகநபரான திரு எஸ் நந்தாசன என்பவரை பொலிசார் தேடிவருகின்றன.

## இந்தஅர..

1-ம் பக்கத் தொடர்ச்சி

தோட்டத் தொழிலாளர் மத்தியில் அரசாங்கம் தமிழர்!- சிங்களவர் என்ற பிரச்னையை எழுப்பி வகுப்புவாதத்தை ஏற்படுத்த முயல்கிறதென்றும், ஆனால் தொழிலாளர்களைப் பிரிக்க இவர்களால் முடியாது என்றும் கூறினார்.

திரு ஆலாலசுந்தரம், திரு கணபதிப்பிள்ளை உட்பட மற்றும் பலரும் பேசினர்.

(கு வி ம)

புதிய மலேசிய பிரதமர்

## அப்துல் ரஸாக் பதவி ஏற்றார்

கோலாலம்பூர் செப், 22

மலேஷியாவின் புதிய பிரதம மந்திரியாக துன்அப்துல ரசாக் இன்று பதவி ஏற்றுக் கொண்டார். அவர் தமது மந்திரி சபையின்விபரங்களை நாளையதினம் வெளியிடுவார் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

முன்னதாக துங்கு அப்துல் ரகுமான் தமது ராஜினாமா கடிதத்தை தேசியராஜமாளிகைக்குச் சென்று மன்னரிடம்சமர்ப்பித்தார். பின்னர் துன் அப்துல்ரஸாக் மன்னரைச் சந்தித்து பதவியை ஏற்றுக்கொண்டார். 48வயதான துன் அப்துல் ரஸாக் 15 ஆண்டுகளாகத் துணைப் பிரதம மந்திரியாக இருந்து வந்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org